விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 05 ஞாயிற்றுக்கிழமை (19.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 182

வாழ்நாள் முழுவதும்
வளமுடன் வாழ
அண்ணா
ஜீவாகாரம்
உடனடியாக உண்ணககூடிய
நிலையில் உள்ள சத்துணவு
விபரங்களுக்கு
அண்ணா கோப்பிக் கடை
இல.4 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

# பொதுக்கட்டமைப்பை விரைவுபடுத்துமாறு

# தமிழ்க் கூட்டமைப்பு அரசிடம் கோரிக்கை

(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு பகுதி மக்களுக்கான புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே உருவாக்கப்படவுள்ள பொதுக் கட்டமைப்பில் உடனடியாக கைச்சாத்திடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பதற்றம் வாகனங்கள் தீக்கிரை

(திருகோணமலை)

திருகோணமலை சேருநுவர பகுதியில் நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்றுவரை பதற்றமான சூழ்நிலை நிலவியது. சேருநுவர பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த முத்துபண்டார என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குச் செல்லும் வாகனங்கள் எரியூட்டப்பட்டன. இச் சூழ்நிலை தொடர்பாக திருகோணமலை அரசியல்துறை பொறுப்பாளர் சி. எழிலன் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சி.சு.கட்சி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி விசேட அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சிலர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து உரையாடவுள்ளனர். இதற்கான அழைப்பினை ஜனாதிபதி விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியினை தீர்ப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று நான்கு யோசனைகளை முன்வைத்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்

### ஹக்கீம் எச்சரிக்கை

(கொழும்பு)

சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் அனைவரும் ஒரு பொது முன்னணியில் இணைய வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கட்சியின் அதியுயர் அரசியல் பீடம் கூடி பொதுக்கட்டமைப்பின் நிலை குறித்து ஆராய்ந்தனர். அதன் பின்னர் கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் கருத்துரைக்கும்போது ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

முஸ்லிம் தலைவர்கள் பல்வேறு குழுக்களாக பிரிந்துள்ளதால் முஸ்லிம் சமூகத்தின் விருப்புகளும், அபிலாஷைகளும் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன. எனவே முஸ்லிம் சமூகத்திற்கு சேவையாற்றவேண்டிய பொது அக்கறை அனைவருக்கும் இருப்பதால் சகல முஸ்லிம் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

முஸ்லிம் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றக்கூடியதாக பொதுக்கட்டமைப்பு அமைந்திருந்தால் பொதுக்கட்டமைப்புக் குறித்து அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுகிறது

### சு.ப. தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகம் இல்லை. ஏனைய இடங்கள் அனைத்திலுமே சிறுவர் துஷ்பிரயோகம் மோசமாக இடம்பெற்றுவருகிறது என தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

பாலியல் துஷ்பிரயோம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், வீதிகளில் சிறுவர்கள் பிச்சை எடுத்தல் என்பன இராணுவப் பகுதிகளில் இடம்பெறுகிறது. மிக மோசமான சிறுவர் உரிமை மீறல்கள் எல்லாம் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இடம்பெறுகிறது என்பதையும் நேற்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டினோம். எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் சிறுவர்கள் மாணவர்களின் நலன் பேணும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துவருகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை யுனிசெப்பின் புதிதாக நியமனம் பெற்ற நிறைவேற்று அதிகாரமுடைய பணிப்பாளர் ஆன் வெனிமின் நேற்று கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினார். உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வருகை தந்த யுனிசெவ் பணிப்பாளரை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு. தியாகராஜா ஆகியோர் வரவேற்றனர்.

முற்பகல் 10.45 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை



கிளிநொச்சி சமாதான செயலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. இச் சந்திப்பின் நிறைவில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்கள் ஊடகவியலாளருக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

20 வருடகால போரினால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை புத்தர் சிலை விவகாரம் யூலை 10 வரை இறுதிக் காலக்கெடு

(திருகோணமலை)

திருகோணமலையில் அமைக்கப்பட்ட திடீர் புத்தர் சிலை தொடர்பில் இறுதித் தீர்வை வழங்க எதிர்வரும் யூலை 10 ஆம் திகதி வரை மட்டும் காலக்கெடுவை வழங்க திருகோணமலை தமிழர் பேரவை முடிவு செய்துள்ளது.

கடந்த 16 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்தபோது தமிழ் மக்கள் பேரவை மேற்கொண்ட போராட்டம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களிலும் மேற்கொள்ளப்படும் மக்கள் போராட்டங்களுக்கு பக்கபலமாக இருப்பதாக தமிழ்ச்செல்வன் உறுதி அளித்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழ்க் கூட்டமைப்பின் (12 ஆம் பக்கம் பார்க்க)

SWISS
Mineral Water
Buy Swiss Mineral and win several lakhs worth of prices
Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59
Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63
சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# பொதுக்கட்டமைப்பையே ஆதரிக்காத பேரினவாதிகளுடன் இடைக்கால நிர்வாகம், நிரந்தரத் தீர்வு பற்றிப் பேசமுடியுமா?

## சுட்டிக்காட்டுகிறார் பத்மினி சிதம்பரநாதன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

**காலங்காலமாக இனவாதம் எங்கள் மீது திணிக்கப்பட்டது. இந்த இனவாதிகள் பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு கோலங்கொண்டு நின்றார்கள். எங்களுடைய உரிமைகள் பற்றிப் பேசப்படும் போதெல்லாம் இவர்கள் இனவாதிகளாகத் தோன்றினார்கள் இதுதான் அடிப்படை உண்மை. சிங்கள தேசத்தில் இருக்கின்ற ஜனநாயகவாதிகள் எனப்படுவோர் கூட பேசாமல் இருப்பது அல்லது அச்சப்பட்டு இருப்பதுதான் தெற்கின் நடைமுறை.**

கடந்த வியாழக்கிழமை கைதடியில் நடைபெற்ற உண்ணாநோன்பில் உரையாற்றிய யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தெற்கில் பௌத்த சிங்களப் பேரினவாதம் தலைவிரித்தாடும் ஓர் சூழலில் நாம் இங்கு கூடியுள்ளோம். பேரினவாத வெறிச்சூழல் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஒரு வெறுப்பை உருவாக்கியுள்ளது. மக்கள் ஆங்காங்கே கூடித் தமது வெறுப்பைத் தெரிவித்த வண்ணமுள்ளனர்.

சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் என உண்ணா நோன்பு தொடர்ந்தும் நடைபெறுகிறது.

சிங்களப் பேரினவாதம் கோலங்கொண்டு நிற்பது எங்களுக்குப் புதிதல்ல. கடந்த காலங்களில் நாங்கள் சாத்வீக வழியில் போராடி அது வெற்றியளிக்காமல் போக ஆயுதம் ஏந்திப் போராடி சிங்கள அரசுக்கும், சர்வதேசத்துக்கும் எமது ஆற்றலைக் காட்டி மீண்டும் சாத்வீக வழியில் நாங்கள் போராடுகின்ற இந்த நேரத்தில் சிங்கள அரசு அதாவது சிங்கள இனவாதிகள் அதே பழைய கோலத்தையே மீண்டும் மீண்டும் காட்டுகிறார்கள்.

சுனாமி நிவாரணம் ஒரு மனிதாபிமானப் பணி. பெருந்தொகை மக்கள் உயிரிழந்து பெருமளவு சொத்துக்கள் அழிந்துபோன நிலையில் உலக நாடுகளெல்லாம் தாங்கள் வாக்களித்த நிதியை விட மேலதிகமான நிதியை வழங்கத் தயாராக ஒரு நல்ல உணர்வோடு இருக்கின்ற வேளையில் இந்த பௌத்த துறவிகள் ஒரு மதபீடத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு செய்வது நியாயமானதா? உயரிய மதபீடமான தலதா மாளிகையில் ஒரு பௌத்த துறவி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு போகக்கூடாது, அவர்களின் வீடுகள் கட்டப்படக் கூடாது, அவர்கள் மீண்டும் தொழில் செய்யக் கூடாது. துவண்டு போன அவர்கள் மீண்டும் எழும்பி நின்றால் நான் சாவேன் என்ற அடிப்படையில் தெற்கில் உண்ணாநோன்பிருந்தார்.

இன்றைக்கு வெவ்வேறு விதமான ஆக்கிரமிப்புக்கள் எங்கள் மீது திணிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த நிலைமையை சர்வதேச நாடுகள இன்று ஓரளவு புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கின்றன. எங்கள் மீது இராணுவ அழுதங்கள் பிரயோகிக்கப்பட்ட போதெலலாம் சாதாரண மக்கள் அசசத்தில் மௌனம காத்தார்கள்இந்த ஒருமௌனப்பண்பாடு நிலவியது.

அந்த நேரம் வெளிநாடுகளுக்கு புலிகள் தமிழ்மக்களை துன்புறுத்துகின்றார்கள் என்று சிங்கள அரசு பிரச்சாரம் செய்தது. அரசோடு சேர்ந்து நின்ற தமிழர்களில்சிலரும் வெளிநாடுகளுக்கு அதையே அனுப்பினார்கள். இந்தச் செய்திகளை நம்பிக்கொண்டிருந்த சர்வதேசம் காலப்போக்கில் எங்களுடைய இராணுவ வெற்றிகளோடும் பல்வேறு போராட்டங்களோடும் தனது புரிந்துகொள்ளலை மாற்றத் தொடங்கியுள்ளது.

அதாவது, தமிழர்கள் ஒரு மக்கள்கூட்டம்உரிமைக்காக உருக்கொண்டு நிற்கின்றது என்பதை உலக நாடுகள் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளன.

விடுதலைப் புலிகள் எங்களுக்குப் பெற்றுத் தந்த படைப்பலம், அரசியல் பலம் தமிழர்களை உலகில் நிமிரப்பண்ணியுள்ளது. இன்று தமிழர்களிற்கென உத்தியோகப் பற்றற்ற ஓர் அரசு இருக்கின்றது. இதை சர்வதேசம் உணரத்தலைப்பட்டுள்ளது. சுனாமி அனர்த்தம் வந்தபோது உடனடியாக அதை எதிர்கொண்டு அனர்த்த முகாமைத்துவத்தைக் கவனிக்கவென ஒரு கட்டமைப்புக் கூட எங்களிடம் இருந்தது. இதுவெல்லாம் வெளிநாடுகளுக்கு ஒரு வியப்புத்தான்.

ஆனால், தெற்கை எடுத்துப்பார்த்தால் அவர்கள் இப்படியொரு கட்டமைப்பை ஏற்படுத்த எத்தனையோ நாட்கள் சென்றது. இதையெல்லாம் சர்வதேச நாடுகள் பார்த்துக் கொண்டிருந்தன. சர்வதேச நாடுகள் மத்தியில் எங்களைப் பற்றிய நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சார்ந்தவர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று எங்களுக்கான உரிமையின் நியாயப்பாடுகளை எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அது கூட சர்வதேச மட்டத்தில் நிறைய மாற்றத்தை ஏற்படுத்தியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெவ்வேறு குழுக்களாக தம்து தேசியக் கடமையைச் செய்து வருகிறார்கள். மக்களுக்கான சலுகைகளை எங்களால் எவ்வளவு செய்ய முடியுமோ தெரியாது. ஆனால் நாங்கள் வெளிவிவகாரக்குழுவாக இருந்து பல்வேறு தூதராலயங்களுக்குச் சென்று தமிழர் தரப்பின் நியாயப்பாடுகளை எடுத்துச் சொல்லி வருகின்றோம். அவர்கள நிறையப் புரிந்து கொள்கிறார்கள். நாங்கள் வெளிவிவகாரக் குழு என்றவகையில் செய்த பணியில் எமக்கு திருப்தியிருக்கின்றது. சலுகைகளை வழங்க முடியவில்லை என்றாலும் வெளி உலகுக்கு எங்களுடைய நியாயப்பாடுகளை விளங்க வைத்த திருப்தியுண்டு.

இந்த நிலைமையில், அண்மையில் வோஷிங்டனில் நடந்த கூட்டத்தில் பொதுக்கட்டமைப்பு உடனடியாக ஏற்படுத்தவேண்டும் எனச் சர்வதேச நாடுகள் தீர்மானித்திருந்தன.

மேலும், துணைப்படைகளை இயக்குவதை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும் என்று சொல்லியுள்ளனர். இதெல்லாம் எமக்குச் சாதகமான நிலை. பேரினவாதிகள் ஒரு மோட்டுத்தனமான முறையில் பிடிவாதம் பிடிப்பது சர்வதேசத்துக்கு விளங்குகின்றது. வெறும் ஒரு புனர்நிர்மாணக் கட்டமைப்புக்கே தடை செய்கின்ற இந்தப் பேரினவாதிகள் எப்படி எங்களுடைய உரிமைகளை வழங்கப் போகிறார்கள் என்ற கேள்வியை சர்வதேச நாடுகளுக்கு நாம் விளங்கப்படுத்த வேண்டும்.

இந்த நிலையில், சாதாரண தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும்? என்பதுதான் இன்றைக்கு முக்கியமான விடயம். நிவாரணக் கட்டமைப்புக்கே சம்மதம் தராத இந்தப் பேரினவாதிகளிடம் எங்களுடைய இடைக்கால அதிகாரம் பற்றியோ நிரந்தரத்தீர்வு பற்றியோ எங்களுடைய உரிமைகளைப் பற்றியோ பேசமுடியுமா? என்தை நாம் மிகவும் நிதானமாக சிந்திக்க வேண்டும்.

இன்றைக்கு நாங்கள் பலம் பெற்ற நிலையில் இருக்கிறோம். எங்களுக்கென்ற ஒரு உத்தியோகப் பற்றற்ற அரசு இருக்கின்றது. எங்களுக்கென்றொரு நல்ல படைபலம் இருக்கின்றது. நல்ல ஒரு அரசியல் கட்டமைப்பு உள்ளது. சாதாரண மக்கள் உரிமைகள் பற்றிய புரிந்துணர்வோடு தயாராக இருக்கவேண்டும். அப்படி இருக்கும் போதுதான் எங்களுடைய தேசியத் தலைவரின் கரங்களுக்கு பலம் சேர்க்க முடியும். ஒவ்வொரு நாளும் விழிப்பாக இருக்கவேண்டும். கூருணர்வு பெறவேண்டும்.

அனைத்து மக்களையும் அணிதிரட்டவேண்டும். இதற்கான ஓர் அடையாள நிகழ்வாக இவ் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் அமையுமாயின் அது வரவேற்கத்தக்கது என்றார். (ந)

## இராசி பலன்

**19.06.2005**
**(ஆனி 05, ஞாயிற்றுக்கிழமை)**
**துவாதசி பிற்பகல் 3.27 மணிவரை**
**விசாகம் பின்னிரவு 12.33 மணிவரை**
**இராகுகாலம் 4.24 -5.54 மணிவரை**
**சுபநேரம் 8.54 - 10.24 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, சயன சுகம், போசன சுகம், நல்ல செய்தி. |
| இடபம் | உறவினர் வழி நன்மை, பகைவர் நேசம், புதிய சிந்தை, விருந்துபசாரம். |
| மிதுனம் | அஜீரணரோகம், காரியதாமதம், உறவினர் மனஸ்தாபம், அமைதிக்குறைவு. |
| கடகம் | அற்பர் உறவு, பயந்த சுபாவம், தொழில் சிந்தை, புதிய திருப்பம். |
| சிங்கம் | இனிய அனுபவம், வாக்குமேன்மை, புதிய பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| கன்னி | மதிப்புக்குறைவு, அதிகாரம், பணவிரயம், காரிய தாமதம். |
| துலாம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், நல்ல முயற்சி, பிறர் உதவி. |
| விருச்சிகம் | பிதா சிந்தை, தொழில் சிந்தை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், போசன சுகக் குறைவு. |
| தனுசு | பெருமையடைதல், காரிய அனுகூலம், சுப நிகழ்வு, நல்ல செய்தி. |
| மகரம் | பிறருக்கு உதவுதல், புதிய விடயம், நல்ல காரியம், போசன சுகம். |
| கும்பம் | ஆன்றோர் மதிப்பு, வீண் பயம், உடல் உழைப்பு, கட்டுப்பாடு. |
| மீனம் | எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், அபகீர்த்தி, பணக்குறைவு. |

பழைய நேரப்பழ கணிப்பிடப்பட்டது

—வளவன்

## சாரணர் சேவை வாரம

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச்சங்கம் நேற்று முதல் தொடக்கம் 26 ஆம் திகதிவரை சாரணர் சேவை வாரத்தை அனுஷ்டிக்கிறது.

சேவை வாரத்திற்குரிய அட்டைகள் மற்றும் விவரங்கள் ஆகியவை சாவகச்சேரி வலயப் பாடசாலைகளுக்கு கடந்த புதன்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கு வியாழக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் வைத்து வழங்கப்பட்டன. (ந-49)

## சிறுவிளம்பரம்


### மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர் கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 -**
**இரவு 8.30 வரை**

(9567)


## பொதுக் கூட்டம்

யாழ்.மாவட்ட வீடியோப் புகைப்பட கலைஞர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஒளிக்கலை ஒன்றியப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (ந-49)


# CAREER OPPORTUNITIES AT GEORGE STEUART (AGENCIES) LTD

*(North / East territory)*

## SALES CUM MEDICAL REPRESENTATIVES

**GEORGE STEUART (AGENCIES) LIMITED, a subsidiary of the oldest mercantile establishment in Sri Lanka, is a fast growing marketing and distribution enterprise for medical products representing well-known Companies worldwide.**

**We are looking for personable, dynamic, result oriented and self motivated individuals to join the company's expansion programme.**

**Applicants should have the following qualifications:**

- **GCE A/L qualification in Bio Science or Mathematics**
- **Previous experience in selling generic and branded pharmaceutical products and 2-3 years medical detailing experience in recognized pharmaceutical company.**
- **A good command of English. Knowledge of additional languages will be an advantage.**
- **Age should not be more than 30 years.**
- **Candidates residing in the North and East provincial areas will be preferred**
- **A professional qualification in Marketing will be an added advantage.**

**An attractive remuneration package, a great working environment and a rewarding career awaits the selected candidates.**

**Please apply within ten days with complete bio-data including details of previous and current employment, copies of academic professional certificates and names of two non-related referees to:**


**Manager - Human Resources**
**GEORGE STEUART (AGENCIES) LTD**
**NO.45, Janadhipathi Mawatha,**
**Colombo 1**

(C/1448) **E-mail: hr@georgesteuarts.com**


# தியாகிகள் தினம் 19.06.2005

சகலவிதமான அடக்குமுறை அதிகாரங்களையும் தகர்க்க தம்மையே அர்ப்பணித்தவர்களுக்கு எம்


## இதய அஞ்சலிகள்



ரெலோ தலைவர்
சிறி சபாரத்தினம்



த.வி.கூ தலைவர்
அ.அமிர்தலிங்கம்



ஆக்கம்
19.11.1951

அழிப்பு
19.06.1990

செயலாளர் நாயகம்
அமரர் தோழர் க.பத்மநாபா
(ஈ.பி.ஆர்.எல்.எவ்)




கலாநிதி
நீலன் திருச்செல்வம்



டாக்டர்
ராஜினி திரணகம



பத்திரிகையாளர்
நடராஜா அற்புதராஜா
(ஈ.பி.டி.பி)



அதிபர்
செ.ஆனந்தராஜா



டாக்டர்
எஸ்.இராஜசுந்தரம்
(காந்தீயம்)



தோழர் றொபேட்
சுபத்திரன்
(ஈ.பி.ஆர்.எல்.எவ்)




தங்கத்துரை



தோழர் சுந்தரம்
சிவசண்முகமூர்த்தி
(புளொட்)



எம்.ஜி.ஆர் பேரவை
தலைவர்
பொன். மதிமுகராஜா





பத்திரிகையாளர்
பாலநடராஜா ஐயர்

## இன்று ஒரு தகவல்

# மரமும் மனிதனும்

ஒரு ராஜா தனது பரிவாரங்களுடன் ஒரு காட்டின் வழியே போய்க்கொண்டிருந்தார். பக்கத்தில் அமைச்சர், அரண்மனை சேவகர்கள் எல்லோரும் போகின்றனர். திடீரென்று எங்கிருந் தோ ஒரு கல் விர்ரென்று வந்தது. நேராக வந்து ராஜாவின நெற்றியில் பட்டது. அவர் நெற்றியைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டார். பக்கத்திலிருந்தவர்களெல்லாம் பதறிப் போனார்கள். ராஜா மீது ஒரு கல் பட்டதென்றால் அது சும்மாவா?

“எங்கிருந்து அந்தக் கல் வந்திருக்கும்’’ என்று தேடிக் கொண்டு எல்லோரும் நாலாபுறமும் ஓடினார்கள். அமைச் சரும் ஒரு பக்கம் ஓடினார். அங்கே ஒரு சிறுபை யன் நின்று கொண்டிருந்தான். அவனது கையில் ஒரு கல் வைத்துக் கொண்டிருக்கிறான். அமைச்சர் கோபமாக இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டார்.

அவன் பயந்து போய்விட்டான். மெதுவாக.. வாயைத் திறந்து “மாங்காய் அடித்துக் கொண்டிருக்கிறேன்’’ என்றான். பக்கத்தில் பார்த்தார்... ஒரு பெரிய மாமரம்! கீழே இரண்டு மாங்காய் கிடந்தது! அவர் புரிந்து கொண்டார். சிறுவன் மாங்காய் அடிப்பதற்காக வீசிய கல் தான் மன்னரின் நெற்றி யில் வந்து பட்டிருக்கிறது. இருந்தாலும் அவனைச் சும்மா விடமுடியுமா?

பிடித்து இழுத்துக் கொண்டு வந்து ராஜாவின் முன்பு நிறுத் தினார். “மன்னா இவன் தான் கல் வீசியவன். இவனை சும்மா விடக்கூடாது... தண்டனை கொடுக்க வேண்டும்” என்ற னர் எல்லோரும். ராஜா யோசித்தார். “விசாரிக்காமல் தண்டனை கொடுப்பது தவறு! நாளைக்கு அரண்மனையில விசாரணை செய்யலாம்’’ என்று கூறிவிட்டுப் போய்விட் டார்.

மறுநாள் அரண்மனையின் உள்ளே விசாரணை மண்ட பத்தில் எல்லோரும் கூடியிருக்கிறார்கள். அந்த சிறுவனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். ராஜா விசாரிக்கிறார் “ஏனப்பா! நீ அந்தக் காட்டில் என்ன செய்து கொண்டிருந் தாய்!” என்று கேட்டார். “மாங்காய் அடித்துக் கொண்டி ருந்தேன்’’ என்றான் சிறுவன். “எத்தனை மாங்காய் கிடைத் தது?” என்று கேட்டார். ‘இரண்டு’ என்றான். “நீ வீசிய கல் மரத்தில் பட்டால் அதற்கு வலிக்கும் என்று உனக்குத் தெரியாதா?’’ என்றார். ‘தெரியாது’ என்றான். நீ வீசிய கல் மனிதன் மீது படும் என்பது உனக்குத் தெரியுமா?’’என்றார். ‘தெரியாது’ என்றான்.

ராஜா கொஞ்சநேரம் யோசித்தார். அதன்பின் அந்தச் சிறுவனைப் பார்த்து “உனக்குத் தண்டனை கிடை யாது! போய்வா’’ என்றார். அரண்மனையில் இருந்த எல் லோருக்கும் ஆச்சரியம்! “ என்ன இது... ராஜா இப்படிச் செய்து விட்டாரே” என்று. இருந்தாலும் ராஜா தீர்ப்புச் சொன் னால் சொன்னதுதானே! எல்லோரும் கலைந்து போய் விட்டார்கள்.

கடைசியாக அமைச்சர் மட்டும் அங்கே நின்று கொண்டி ருக்கிறார். “என்ன அமைச்சரே! என்ன யோசனை?” என் றார் மன்னர். அமைச்சர் மெதுவாக “ம் ஒன்றுமில்லை... இந்தத் தீர்ப்பு... ” என்று இழுத்தார். ராஜா சிரித்துக் கொண்டே சொன்னார் “அமைச்சரே! மரத்திற்கு அறிவு குறைச்சல்: மனிதனுக்கு ஆறு அறிவு என்று சொல்கி றார்கள். ஒரு மரம் தன் மீது கல் எறிந்த சிறுவனுக்கு இரண்டு மாங்காயைப் பரிசாகக் கொடுத் திருக்கிறது. ஒரு மனி தன் தன்மீது கல்லெறிந்த ஒரு சிறுவனுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க் கிறீர்களே! இது நியாயமா?” என்று கேட்டி ருக்கிறார். அமைச்சர் தலை குனிந்தாராம்.

அறியாமல் செய்யும் குற்றத்தை மன்னிக்கும் மனோ பாவம் மனிதனுக்கு வேண்டும் என்பதை வலியுறுத்து வதற்காக இந்தக் கதை.

“இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட மனோபாவம் யாருக் குமே இல்லை சார்’’ என்றான் ஒரு சிறுவன். “ஏன் அப் படிச் சொல்கிறாய்?” என்று கேட்டேன். “நான் கூட ஒரு மாமரத்தில் கல் எறிந்தேன் சார்... அது இரண்டு மாங்காய் கொடுத்தது. அதற்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு மனிதன் மீது அந்தக் கல் படவே யில்லை இருந்தாலும் அவன் தண்டனை கொடுத்து விட்டான் சார்’’ என்றான். “என்ன தண்டனை? ” என் றேன். “இரண்டு அறை” என்றான். “ஏன் அப்படி?” என் றேன். “அந்த மரம் அவனுக்குச் சொந்தமாம் சார்... அது எப் படி எனக்குத் தெரியும்?” என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ரஷ்ய தூதுவரின் யாழ்ப்பாண விஜயம்









(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கான விஜய மொன்றை மேற்கொண்ட இலங்கைக்கான ரஷ்ய தூது வரையும் இரண்டாவது செயலாளரையும் யாழ். பாது காப்புப் படைத் தலைமையகத்தில் யாழ். பாதுகாப்புப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.டி. தென்னக் கோன் வரவேற்றார். அவர்களுக்கு யாழ்.பாதுகாப்புப் பற்றியும் பொதுமக்கள் சம்பந்தமான விடயங்கள் பற்றியும் தளபதியால் விளக்கமளிக்கப்பட்டது.

பழமைவாய்ந்த யாழ். கோட்டையை பார்வையிட்ட அவர்கள் யாழ்.பொது நூலகத்திற்கும் விஜயம் செய் தார்கள்.

பின் மண்றகாடு பிரதேசத்திற்கு விஜயம் செய்த அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டு அகதிமுகாம் களில் தங்கியிருக்கும் மக்களைப் பார்வையிட்டதுடன் 52ஆவது தளபதி பிரிகேடியர் எஸ்.ஜி. கருணாரத்னா வால் வரவேற்கப்பட்டார்கள். அவர்களுக்கும் மணற் காடு கிராம கரையோரப் பிரதேசங்கள் பற்றியும் கடல் பாதுகாப்பு முன்னரங்குகள் பற்றியும் தளபதியால் விளக் கமளிக்கப்பட்டது.

அடுத்தநாள் அவர்கள் தொண்டமானாறு பாலத் தையும், கீரிமலை, சங்கமித்திரை இறங்கிய இடம், பொன்னாலை தடாகம், விவறாரை, கந்தரோடை தாது கோபுரம், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ஆகிய வற்றையும் பார்வையிட்ட பின் கொழும்பு திரும்பினார் கள். (து)

# இராணுவச் சிப்பாய்க்கு 4 1/2 ஆண்டு கடூழியச்சிறை

## வவுனியா மாவட்ட நீதவான் இளஞ்செழியன் தீர்ப்பு

(வவுனியா)

கடை ஒன்றில் இருந்து நகைகளை கொள்ளை அடித்துச் சென்ற இராணுவச் சிப்பாய்க்கு 4 1/2 ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனையினை வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கடந்த புதன்கிழமை வழங்கியுள்ளார்.

2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வவுனியா நகரப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் சிவில் உடையில் சென்ற இராணுவச் சிப்பாய் கைக்குண்டு ஒன்றினைக் காட்டி பயமுறுத்தி 12 தங்கச்சங்கிலி அடங்கிய பெட்டி ஒன்றுடன் தப்பிச் சென்று வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாமுக்குள் நுழைய முற்பட்ட சமயம் அவரைப் பின்தொடர்ந்து சென்ற ஊழியர்கள் அவர் முகா முள் சென்றதை உறுதிப்படுத்தியுள்ளனர். கடை உரிமை யாளர் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து அவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தது. இவருக்கு எதிராக கடையினைச் சேர்ந்த மூன்று பேரும் தாண்டிக்குளம் முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் இருவரும் பொலிஸாரும் சாட்சியம் அளித்துள்ளனர்.

சிவில் உடையில் வெடிபொருட்களை வைத்திருந் தமை, கொலை அச்சுறுத்தல் விடுத்தமை போன்ற குற்றத்திற்காக எதிரியான இராணுவச் சிப்பாய்க்கு 4 1/2 ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி வவுனியா மாவட்ட நீதவான் தீர்ப்பளித்துள்ளார். (அ-9)

## துன்னாலையில் நடைபெற்ற சமூக வலுவூட்டல் மாநாடு

(திருநெல்வேலி)

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் சமூக வலுவூட்டல் மாநாடு ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடாத்தப்பட்டுள்ளது.

துன்னாலைப் பகுதியில் உள்ள ஆட்டுப்பட்டி பொது மண்டபத்தில் இம் மாநாடு இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக வலுவூட் டல் பணிப்பாளர் ம.செல்வராஜா தலைமையில் இடம் பெற்ற இம் மாநாட்டில் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இம் மாநாட்டில் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் உட்பட இப்பகுதிப் பொதுமக்களும் பெரு மளவில் கலந்துகொண்டனர். (ந-43)

## நாட்டை அபிவிருத்தி செய்ய சமாதானம் அவசியம்-பிரதமர்

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு சமாதானம் அத்தி யாவசியமானது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார். பொல்ஹித்திக் கமவிலவில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் சமா தானம் இருக்க வேண்டும் எனவும் மீண்டும் ஒரு யுத்தத் திற்குச் செல்ல அரசாங்கம் தயாரில்லை எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதே தமது இலட்சியம் எனவும் குறிப்பிட்ட பிரதமர் அனைத்துச் சந்தர்ப் பங்களிலும் அனைத்து இன மக்களையும் அவர்களது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# பாடசாலைகளின் பதில் அதிபர்களை அதிபர் சேவையில் இணைக்கவும்

## பதில் அதிபர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலை பதில் அதிபர்கள் சங்கம், அரசாங்கத்திற்கு விடுத்த கோரிக்கையில், தம்மை அதிபர்கள் தரத்தில் இணைத்துக் கொள்ளு மாறு கேட்டுள்ளது.

அதிபர்கள் சேவைக்கான தகமையைத் தாம் பெற்றிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தச் சங்கத்தினர் ஜனாதிபதியையும் சம்பந்தப் பட்ட கல்வி அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுவார்த் தைகளை நடத்தியுள்ளார்கள்.

நாட்டிலுள்ள பாடசாலைகளில் அதிபர்களுக்கு சுமார் 3 ஆயிரத்து 500 வெற்றிடங்கள் இருப்பதாக இந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் சங்கத்தின் தலைவர் மஹிந்த உடுவல தெரிவித்த தகவலில், 1999 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சம்பந்தப்பட்ட பரீட்சைகள் நடத்தப்படாததினால் தரப் படுத்தப்பட்ட அதிபர்களுக்கு பற்றாக்குறை இருப்ப தாகக் குறிப்பிட்டார்.

கொழும்பில் ஊடகவியலாளர் மத்தியில் உரை யாற்றிய சங்கத்தின் தலைவர் இவர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-9)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 26

''எடுத்த எடுப்பில் தமிழ் பேசும் இனம் தனது இழந்த
உரிமைகள் அனைத்தையும் பெற்றுவிட முடியாது.
நிலையான கொள்கையோடு தொடர்ச்சியாகப்
பலகாலத்திற்கு நாம் உரிமைக்குரல் எழுப்பினால்
தான் உரிமைவாழ்வு பெறமுடியும். உலகிலுள்ள
விடுதலைபெற்ற பல்வேறு நாடுகளது தேசிய
இனங்களும் இந்தப் பேருண்மையை உணர்த்தி
நிற்கின்றன். தமிழ் பேசும் இனம் தனது சுய
நிர்ணய உரிமையை நிலைநாட்ட உறுதிபூண்டு
விட்டதை சிங்கள அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும்
எடுத்துக் காட்டவேண்டும்''

என்று தமிழரசுத் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் விடுத்த வேண்டுகோளானது உடன்பாடனதாகவும் தமிழ்பேசும் மக்களைக் கவரக்கூடியதாகவும் இருந்தது.

''ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் அங்கமாக சுயநிர்ணய
உரிமைக்கொள்கைப்படி ஓர் சுயாட்சித் தமிழரசும்,
ஓர்சுயாட்சி முஸ்லிம் அரசும் நிறுவி இலங்கை வாழ்
தமிழ்பேசும் மக்களுடைய அரசியல், பொருளாதார,
கலாசார விடுதலையைக் காண்பதே இக்கட்சியின்
நோக்கமாகும்''

என்பதைப் பல தடவைகள் வலியுறுத்தியபோதிலும் பெரும்பான்மையினர் இக்கொள்கையினைப் பிரிவினை நோக்காகவே கொண்டு விமர்சித்தும் எதிர்த்தும் வந்தனர் .தமிழரசுக் கட்சியினர் நாட்டைப் பிரிக்க முயல்கின்றனரெனக் கூக்குரலிட்டனர். இக்கட்சிக்கும் தமிழ்மக்களுக்கும் எதிரான உணர்வலைகளைச் சிங்கள மக்களிடம் ஏற்படுத்த முயன்றனர். இலங்கைத் தமிழரசுக் கட்சியானது. 1952 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இரண்டு தொகுதிகளான கோப்பாய், திருகோணமலை ஆகிய இடங்களில் மாத்திரமே வெற்றியீட்டியது. இருந்தபொழுதிலும் 1956 பொதுத்தேர்தலில் அதனது செல்வாக்கு அபரிமிதமாக அதிகரித்து வட கிழக்கு மாகாணங்களின் தமிழ்த் தொகுதிகள் பத்தினைக் கைப்பற்றுமளவுக்கு வளர்ச்சியடைந்தது. இதுகாலவரையிருந்த தமிழ்த் தலைமை புறக்கணிக்கப்பட்டுத் தமிழரசுக் கட்சியின் தலைமையிடம் தமிழ்த் தேசியவாதத்தினை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்புக் கையளிக்கப்பட்டது. இதே வேளையில் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு முயன்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸானது தன் அரசியல் வாழ்வை இறங்குமுகமாக எதிர்கொண்டது. தனிப்பட்ட செல்வாக்கினால் வெற்றிகண்ட ஒரு சில வட பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதான தேய்பிறை வாழ்வே அதன் நிலைப்பாடாகத் தொடர்ந்தது. இறுதிக் காலங்களில் பெயரளவிலான கட்சியாக இன்றுவரை அதன் அரசியல் வாழ்வு தென்படுகிறதென்பதே பொருத்தமானதாகும். 1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் வரை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற ஆசனச் செல்வாக்குக் குறைவடையவில்லை. கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் தொகுதிகளில் முஸ்லிம் வேட்பாளர்களையே நிறுத்தும் கொள்கையையே அது தொடர்ந்து கடைப்பிடித்து வந்தது. தமிழ்த் தேசியப் போராட்டத்தினுள் முஸ்லிம் மக்களையும் இழுத்துக் கொள்ளும் அதன் முயற்சி பொதுவில் வெற்றியளிக்கவில்லையென்றே கருத வேண்டும். கேட்முதலியார் காரியப்பர், எம்.எம்.முஸ்தபா, எம்.சி.அகமது,எம்.ஈ.எச். முகமதலி போன்றவர்கள் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகளாகவும், எம்.எம்.அப்துல் மஜீத் ,எம்.ஏ. அப்துல்மஜீத் போன்றவர்கள் தமிழரசு ஆதரவு பெற்ற பிரதிநிதிகளாகவும் பாராளுமன்றத்தை அலங்கரித்தவர்கள். இருந்த போதுங்கூட இவர்களனைவரும் இடைநடுவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகி அரசியல் நோக்கங்களுக்காக அவ்வக்கால அரசாங் கங்களில் இணைந்து கொண்டவர்களாவர். எப்படியிருந்தாலும் வடக்குக் கிழகில் வாழும் தமிழ்பேசும் மக்கள் அனைவரையும் ஒரே கொடியின் கீழ் இன, மத வேறுபாடுகளைக் கடந்து உணர்வு ரீதியாக முதன் முதலில் ஒன்றிணைந்த பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் அதன் தலைவர் செல்வநாயகத்திற்குமே உண்டெனபதில் ஐயமில்லை. இது சம்பந்தமாகப் பல குறைபாடுகளிருப்பினும் பிற்காலத்தைய அரசியற் சூழ்நிலைகள் பல பிளவுகளைக் காட்டினும் தமிழரசுக் கட்சியின் பணி குறிப்பிடத்தக்கதே ஆகும். மலை யகத் தமிழர்களையும் இணைத்துக்கொள்ள ''இலங்கைத் தொழிலாளர் கழகம்'' போன்ற அமைப்புக்களினூடு இது முயன்றதாயினும் அது கைகூடவில்லை.

1956ஆனி ஐந்தில் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டமும் அதன் பின்னர் தொடர்ச்சியாக இடம்பெற்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசுக்கெதிரான போராட்டங்களை வலுப்பெறச் செய்தது. காலிமுகத்திடற் சத்தியாக்கிரகம் குண்டர்களாற் குழப்பப்பட்டதும், பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் தமிழர் நலன் காக்காத நடத்தைகளும் தமிழ்பேசும் மக்களை உணர்ச்சி கொள்ள வைத்தன. அவர்கள் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளிலெல்லாம் பெருமளவில் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

1957இல் நடைபெற்ற பாதயாத்திரையும் திருமலை மகாநாடும் ஓர் உணர்ச்சிமிகுந்த சூழ்நிலையைத் தமிழரிடையே ஏற்படுத்தியது. ஆகஸ்ட் போராட்டத்துக்கான முன் முயற்சிகளிலீடுபட்டிருக்கும் போதே அப்போதைய பிரதமரால் அதைத் தணிக்கும் நோக்குடன் பண்டா- செல்வா ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தமானது சிங்கள-பௌத்த தீவிரவாதிகளினதும் புத்த பிக்குகளினதும் கடும் எதிர்ப்புக் காரண மாகக் கிழித்தெறியப்பட்டுத் தமிழர்கள் முகத்தில் கரி பூசப்பட்டது. அதைத் தொடர்ந்து, சிங்களச் 'சிறீ' பொறித்த பஸ்வண்டிகளை வட பகுதிக்கு அனுப்பி வைக்க 1957 ஜனவரியில் அரசாங்கம் எடுத்த முயற்சிகளுக்கு எதிராக அதேயாண்டு ஏப்ரலில் பொங்கல் தினத்தன்று முதலாவது 'சிறீ' எதிர்ப்பு முயற்சிகள் ஆரம்பமாகின. பலர் கைது செய்யப்படவும், அவர்கள் மீதான வழக்குத்தாக்கல் செய்யப்படவும் 'சிறீ' போ ராட்டம் வழிசமைத்தது. இதன் பின்னரே 1958 மே திங்களில் மூன்று நாட்கள் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாநாடு அரசியல் சுவாலையை இலங்கையெங்கணும் பற்ற வைத்தது. அதனைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் இனக்கலவரங்கள் இடம்பெற்று அச்சுறுத்தல்களுடன் தணிந்து போயிற்று .


1960 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் 1961இல் நீதிமன்ற மொழி மசோதாவை நிறைவேற்றியதுடன் தமிழ்ப் பகுதிகளில் சிங்களத் திணிப்பையும் ஊக்குவித்தது. இந்த நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களையும் தமிழரசுக் கட்சியையும் போராட்டக்களத்தை நோக்கி ஈர்த்தன. 2.1.61இல் நடாத்திய கடையடைப்பைத் தொடர்ந்து, வடகிழக்கு மாகாணங்களில் கச்சேரி வாயில்களில் இடம்பெற்ற மறியற் போராட்டமானது 1961 பெப்ரவரி 20 இல் ஆரம்பமானது. அத்துடன் சட்ட மறுப்பு இயக்கத்தில் அங்கமாக 1961இல் ஏப்ரல் 14இல் முத்திரை வெளியீடும் இடம்பெற்றது. இந்த நடவடிக்கைகள் யாவும் சிங்களப் பெரும்பான்மையினர் பால் தமிழர் மீதான சந்தேகங்களையும் பீதிகளையும் அதிகரிக்கச் செய்ததெனச் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளமை நோக்கற்குரியது. இத்தகைய அரசியற் போராட்டங்களை அடக்குமுகமாக வடகிழக்கில் இராணுவச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு ஒன்றரை மாதங்களுக்கு மேலாக ஸ்தம்பித்திருந்த அரசின் நடவடிக் கைகளை மீளவும் செயற்படுத்தும் நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டது. அத்துடன் இராணுவ ஆட்சியும் தொடரலாயிற்று.

(தொடரும்)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

# நயினை நாக பூசணி அம்மன் பாமாலை

## பன்னிரெண்டாம் திருவிழா



## நல்வழி யருள்வா யம்மா

நான்மறை தன்னைத் தந்து நாதத்தில் இனிமை சேர்த்தாய்
தேன்மலர் மணமாய் நின்று தேனிலும் சுவையைத் தந்தாய்
வான்மழை தனையே தந்து வையகம் வாழ வைத்தாய்
நான்பாடும் பாடல் ஏற்று நல்வழி யருள்வாய் அம்மா!

கவிமணி கந்தமுருகேசதாசனார்

## தாயே சரணடைந்தோம்

நயினைநாயகியே நாகம்பை பேராள்
பயிலுலகு நாகதீபம் என்றே-மயிலாள்
மணிபல்லவப்பதி வாழ் மாந்தரெல்லாம் போற்றும்
அணி செய்வாய் ஆங்கொருங்கால் ஆண்டு

வேதங்கள் தாமொலிக்க வேள்விமிகும் கீர்த்தியினால்
நாதங்கள் காதொலிக்க வைத்திடுமே -போதங்கொள்
நாதமிடும் பேரலைகள் நாகதீவைச் சேர்வதனால்
ஏதமிகப் பொங்குங் கடல்தாயே

கு. மேகலா

## பாற்கடல் நாயகி

நாற்புறம் கடலலைகள் மணமுரசாய் ஒலிக்க
நாகபூசணித் தாய் நீயோ நயினையில் கொலு
விருப்பாய்
பாற்குடம் ஏந்திப் பக்தர் பரவசமாய்த் துதிக்க
பாற்கடல் நாயகியாய் பாவி எம்மை ஈடேற்ற

எஸ்.சிவானந்தராஜா

## உன் பரிசு வேண்டும்

செங்கதிரோன் சிரம் தாழ்த்தி
பரியோட்டும் நயினயம் பதியில்
பதிகொள் நயினை நாகபூசணியே
மன்றாடியே உன்னை
மன்றாடியே வேண்டுகின்றேன்
உன் அருள் கிடைக்க வேண்டும்
தீராத வினைகளெல் லாம்
தீர்த்து வைப்பாய் அம்மா
தரணியில் உன்நாமம் ஒலிக்க
அம்மா உன்பரிசு வேண்டும்

மைதிலி சிவகிருபராஜா

## வேண்டும் பரிசு விலகா தருள்வாய்

நயினை உறைவாய் நகைசெய் நங்காய்
எயிலை அட்ட இறைவர் இடத்தாய்
அயில்வேல் அழகன் அருகில் அமர்வாள்
மயலார் மாந்தர் மனதில் மகிழ்வாய்

தூண்டா விளக்குச் சோதிச் சுடரே
மாண்டார் மனமே மனையாய் மதிப்பாய்
காண்டற் கரிய கடலூடு நின்று
வேண்டும் பரிசு விலகா தருள்வாய்

சிவ சண்முகவடிவேல்

## அணிநயினை அம்பிகையைப் பணிவோம்

அணிநயினை அம்பிகையைப் பணிவோம்-அவள்
அழகுமலர்ப் பாதங்கள் சரணென்று துணிவோம்
பிணியாவும் எமைவிட்டுப் போகும் -பெரும்
பேறெலாம் வலியவே எமதுடமை ஆகும்

சசி

# வரப்போகும் சூரியனே

## திரை விமர்சனம்

'இலட்சியம் எதுவாக இருந்தாலும் முயற்சி செய்தால் நிச்சயம் அடையலாம்' என்பதே கதையின் கருத்து.

'என் பையனை எப்படியாவது பெரிய படிப்பு படிக்க வையுங்க' என்று சொல்லிவிட்டுக் கண்ணை மூடும் மனைவியின் ஆசையை கூலி வேலை செய்து நிறைவேற்றுகிறார் தந்தை. இவரது பராமரிப்பில் வளரும் ஏழை இளைஞன் சக்திவேலு ஐ.பி.எஸ் படிக்கிறான். அவனை அதே கிராமத்தைச் சேர்ந்த பணக்காரரின் மகள் கவிதா விரும்புகிறாள்.

அவனுக்கு வேலைக்கான இன்ரவியூ வருகிறது. அவன் பொலிஸ் அதிகாரியிாக வரப்போகிறான் என்பது தெரிந்ததும் கவிதாவை சக்திவேலுவுக்கு திருமணம் செய்துவைக்க ஏற்பாடு நடக்கிறது. ஆனால் சக்திவேல் ஐ.பி.எஸ் வேலை கிடைக்காமல் திரும்பி வருகிறான். திருமணம் நின்றுவிடுகிறது. அதன்பிறகு அவனுடைய இலட்சியக் கனவு பலித்ததா... கவிதாவை கைப்பிடித்தானா... என்பது மீதிக் கதை.



சக்திவேலுவாக புதுமுகம் த்ரிவிக்ரம் அமைதியாக வந்து கொடுத்த பாத்திரத்தைக் காப்பாற்றி இருக்கிறார். பேசும் வார்த்தைகள் குறைவு என்றாலும் குறை வைக்கவில்லை. நடிப்பில் புதுமுகம் பிரியாஞ்சலி (கவிதா) படபடவென பொரிவதிலும், குறும்பு செய்வதிலும் இளைய பானுப்பிரியாவை நினைவூட்டுகிறார்.

கிராமத்து 'விடலை'க்கு மிகப் பொருத்தம். உணர்வுகளைக் கண்களில் கொண்டுவரும் வித்தையும் தெரிந்து வைத்திருக்கிறார்.

த்ரிவிக்ரம் அப்பாவாக ஆகுதி பிரசாத் வந்து அசத்தி இருக்கிறார். ரமேஷ்கண்ணா போடும் திட்டங்கள் எல்லாமே தலைகீழாக நடப்பது வெடிச்சிரிப்பு. அவரது வில்லன் வேலையும் கச்சிதம். சீதா துரைப்பாண்டி, அஞ்சலிதேவி, சத்தியப்பிரியா, பயில்வான் ரங்கநாதன், புதுமுகம் கவுதமி, செம்புலி ஜெகன், கடுகு ராமமூர்த்தி, கோபி, பாலு ஆனந்த், அஜய்ரத்னம் ஆகியோரும் உள்ளனர்.


தேவாவின் இசை அர்த்தமுடன் ஒலிக்கிறது. கிராம அழகைத் தேடித் தேடி கண்டுபிடித்து கமராவில் அள்ளிவந்திருக்கிறார் அகிலன்.

தடங்கல் இல்லாமல் ஒரே சீராகச் செல்லும் கதையைக் கொஞ்சம் தடுத்து நெளிவு சுளிவாக்கி இருந்தால் வேகம் அதிகரித்திருக்கும்.

ஐ.பி.எஸ் அதிகாரி இளம் தாடியுடன் வருவது பொலிஸ் அதிகாரிக்கு ஜனாதிபதி கொடுத்த விருதை இன்னொருவருக்குக் கொடுக்க முடியுமா என்பது போன்ற சிறு சிறு குறைகளை வசனத்தால் சரிசெய்ய முயன்றிருக்கிறார்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதியுள்ள எஸ்.கே.சாமி, காட்சிகளை இன்னும் அழுத்தமாக்கி பதிய வைத்திருக்கலாம்.

குளிர்ச்சியான சூரியன்.



'தோட்டா'
ஜீவன் - ப்ரியாமணி

# கமல் ஜோடியாக நயன்தாரா

கமல் இரட்டை வேடத்தில் நடிக்கும் 'வேட்டையாடு விளையாடு' படத்தில் கமலின் ஒரு ஜோடி ஜோதிகா என்பது தெரிந்த விஷயம். இன்னொரு கமலுக்கு ஜோடி நயன்தாரா என்பது நயன்தாராவுக்கு இனிப்பான விஷயம்.

* 'தகப்பன் சாமி' படத்தில் பிரசாந்த் ஜோடியாக காதல் சந்தியா நடிக்கிறார். மற்றொரு ஜோடி நமீதா.

* 'கூட்டணி கட்சி' படத்தில் சத்தியராஜ் ஜோடி சூசன். இதில் கவுண்டமணியும் நடிக்கிறார்.

* 'சித்திரம் பேசுதடி' படத்தில் நாயகனும் நாயகியும் கடைசி வரை தொட்டுப் பேசாமல் நடிக்கிறார்கள்.

* 'தாஸ்' படத்தில் கால்பந்து வீரராக நடிக்கிறார் ரவி. இதற்காக ஒரு வாரத்துக்கு ...லையில்

* பிரகாஷ்ராஜ் தயாரிப்பில் பாலசந்தர் இயக்கும் 'பொய்' படத்தின் படப்பிடிப்பு இ... களை வலைவீசித் தேடி வருகிறார் கே.பி.

# வித்தியா... சத்...

சத்தியரா...
படங்களைத் த...
நிறுவனம் பிர...
வரும் 'கர்த்தா'...
சார்பில் ... ஞா...
...
கதாநாயகிகள...
ரமேஷ்கண்ணா,...
நடிக்கின்றனர்.
சத்தியரா...
'தேவுடா'வின்...
சாமியா...
என்பதை நகை...
பொள்ளாச்சியி...

* ஏ.ஆர்.ரஹ்மா...
* 3 மாதங்களு...
விதமான ஸ்டை...
சூர்யா...ம் அடி...



'சின்னா'
சினேகா - அர்ஜுன்

# நிலாவுக்கு மவுசு

முதல் படம் வெளிவருவதற்கு முன்பே எஸ்.ஜே.சூர்யாவின் நிலாவுக்கு மவுசு கூடி வருகிறது.


விழாக்களுக்கு நிலாவை சூர்யா அழைத்துச் செல்வதால் அனைவரின் பார்வையும் நிலா மீதுதான். விளைவு... 2 தெலுங்குப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார் நிலா.

# சுபாபுஞ்சா நடிக்கும் 'சண்முகா'

மாதா மூவி மேக்கர்ஸ் சார்பில் ஏ.ஜி.அருள் மிகப் பிரமாண்டமாகத் தயாரிக்கும் படம் 'சண்முகா'. இதில் நடிகை ஷாலினியின் அண்ணன் ரிச்சர்ட் ஒரு துடிதுடிப்பான பொலிஸ் அதிகாரி வேடத்தில் கதாநாயகனாக நடிக்க, அவரது ஜோடியாக 'மச்சி' படப் புகழ் சுபாபுஞ்சா நடிக்கிறார்.

பிரபல ஸ்டண்ட் மாஸ்டர் ராக்கி ராஜேஷ் வில்லன் கதாபாத்திரத்தில் அறிமுகமாகிறார்.

முக்கியமான கதாபாத்திரங்களில் கருணாஸ், கலைராணி, தேவன், மலேசியா வாசுதேவன், அல்வா வாசு, காக கோபால், சூப்பர் டென் பாலாஜி, ராஜ்பவன் பாலா நடிக்கின்றனர். பா.விஜய், முத்துவிஜயன், யுவன், சினேகன் பாடல்கள் எழுதுகின்றனர். இந்தப் படத்தின் மூலம் ஆற்காடு நவாப் பரம்பரையில் வந்த இளவரசர் ஆஸிப் அலி இசை அமைப்பாளராக அறிமுகமாகிறார்.



பேரரசு
விஜயகாந்த்-தாமினி

# நடிகை அசின் தேடும் விநோத மாப்பிள்ளை

நடிகை அசின் தமிழ்ப்பட உலகில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் முயற்சியி... ஈடுபட்டுள்ளார். அதேநேரத்தில் தனக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை அமையவேண்டு... என்பதையும் மனதில் திட்டமிட்டு வைத்திருக்கிறார். தமிழ்ப்பட உலகில் ஜோதிகா... திரிஷா ஆகியோர் முக்கிய கதாநாயகர்களுடன் நடித்து வந்தார்கள்.

இப்போது நடிகர் விஜய்யுடன் 'சிவகாசி', விக்ரமுடன் 'மஜா', அஜீத்துட... 'காட்பாதர்', சூர்யாவுடன் 'கஜினி' ஆகிய படங்களில் அசின் நடித்து வருகிறார். வே... சில முக்கிய படங்களிலும் நடிக்க வாய்ப்பு வந்துள்ளது.

இதுகுறித்து அசினிடம் கேட்ட போது,

ஜோதிகா, திரிஷா ஆகியோர் இப்போது தெலுங்கில் 'பிஸி' ஆகி விட்டார்கள்... எனவே எனக்கு தமிழில் முன்னணி கதாநாயகர்களுடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்... இருக்கிறது. தமிழ்ப்பட உலகில் எனக்கு முக்கிய இடம் கிடைத்து இருக்கிறது... பாத்திரங்கள் கிடைத்தால் நடிப்பேன். படத்துக்குத் தேவையான அளவு கவர்ச்சி கா... எனக்கு சினிமா மட்டும் தொழில் இல்லை. எங்கள் குடும்பம் பாரம்பரியமாகவே வச...

எனவே நான் பணத்தைப் பெரிதாக நினைப்பது இல்லை. எனக்கு என்று இ... கவனமாக இருப்பேன். நடிப்பில் பெயர் வாங்க முயற்சிப்பேன். என்னைத் திருமண... குணம் படைத்தவரா என்பதைத்தான் நான் பார்ப்பேன். எனது கணவர் எந்தச் சூழ்நி... இருக்க வண்டும்.


பனி மலையில் நானும் என் கணவரும் நிற்கும் போது, குளிர் எங்களை வா... 'ஸ்வெட்டர்' மட்டும் இருந்தால் அதை அவர் எனக்கு மாட்டிவிடுபவராக இருக்கவே...

பாலைவனத்தில் இருவரும் தண்ணீர் கிடைக்காமல் தவிக்கும்போது ஒரு தம்ளர்... தியாக மனம் படைத்தவராக என் கணவர் இருக்க வேண்டும்.

இது என் மனதில் உள்ள ஆசை... திருமணம் செய்யும் காலம் வரும்போது... ஆசை நிறைவேறுமா?



# வித்தியாசமான கதாபாத்திரத்தில் சத்தியராஜ் நடிக்கும் 'தேவுடா'



சத்தியராஜ் நடித்து வெளியான 'அடிதடி', 'மகாநடிகன்' ஆகிய படங்களைத் தயாரித்த நிறுவனம் சுந்தரி பிலிம்ஸ். தற்போது இந்தப் பட நிறுவனம் பிரபு, கார்த்திக் இணைந்து நடித்து வரும் 'குஸ்தி' பார்த்திபன் தியா, மீனா நடித்து வரும் 'கர்த்தா' ஆகிய படங்களைத் தயாரிக்கின்றது. இதையடுத்து சுந்திரி பிலிம்ஸ் நிறுவனம் சார்பில் ஞானசுந்தரி தயாரிக்கும் மிகப் பிரமாண்டமான படம் 'தேவுடா'.

ஒரு வித்தியாசமான கதாபாத்திரத்தில் சத்தியராஜ் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநா கிகளாக மூன்றுபேர் நடிக்க தேர்வு நடந்து வருகிறது. மற்றும் ராஜ்கபூர், ராதாரவி, ரமேஷ் ன்னா, இளவரசு, டி.பி. கஜேந்திரன், சித்ராலட்சுமணன், நடசேன் யுவன் உட்பட பலர் நடிக்கின்றனர். •

சத்தியராஜ், நெப்போலியன் இணைந்து நடித்த 'அடிதடி'யை இயக்கிய டி.ஷிவ்ராஜ் 'தேவுடா'வின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார்.

சாமியார் என்ற போர்வையில் பலபேர் திரிந்து கொண்டிருக்க, நிஜமான சாமியார் யார் என்பதை நகைச்சுவையுடன் சொல்லும் மாறுபட்ட கதை கொண்ட இந்தப் படத்துக்காக பொள்ளாச்சியில் சாமியார் ஆசிரமம் அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.



சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி

தங்கர்பச்சான்-நவ்யாநாயர்

## சினிமாச் சிதறல்

* ஏ.ஆர்.ரஹ்மானை மணிரத்தினம் ஏ.ஆர் என்றுதான் அழைப்பார்.

* 3 மாதங்களுக்கு ஒருமுறை போட்டோ செஷனை வைத்து வித விதமான ஸ்டைலில் 'போஸ்' கொடுப்பது விக்ரமின் பாணி. இதேபோல சூர்யா ும் அடிக்கடி போட்டோ செஷன் நடத்தும் நடிகர்.

ஒரு ாரத்துக்கு லையில் 2 மணிநேரம் கால்பந்து ஆடி பயிற்சி செய்திருக்கிறார் ரவி.

' பட த்தின் படப்பி ப்பு இன்னும் தொடங்கவில்லை. புதுமுக ஹீரோ. ஹீரோயின்

# தலையை மறைக்கும் பிரபலங்கள்

கமலஹாசன், விக்ரம் ஆகியோர் படத்துக்குப் படம் தங்கள் 'கெட்-அப்'பையும் ஹேர் ஸ்ரைலையும் மாற்றுவார்கள். இப்போது அந்த வரிசையில் மேலும் 3 பேர் சேர்ந்திருக்கிறார்கள். 'சாணக்யா' படத்துக்காக சரத்குமார் தலைமுடியை வித்தியாசமான 'கெட்-அப்'பில் மாற்றி அமைத்திருக்கிறார்.

இதை மறைக்க தலையில் குல்லா வைத்துக்கொண்டிருக்கிறார். 'நான் கடவுள்' படத்துக்காக அஜீத் தலை முடியை நீளமாக வளர்த்திருக்கிறார். 'கஜினி' படத்திற்காக சூர்யா மொட்டை போட்டிருக்கிறார். இதன் காரணமாக இவர்களும் தலையை வெளியே நேரடியாகக் காட்டாமல் மறைத்துக் கொண்டே நடமாடுகிறார்கள்.

ா'

அர்ஜுன்



# புதிய நடிகைகளை அறிமுகம் செய்வது ஏன்? — அர்ஜுன்



நடிகர் அர்ஜுன் அவரது படங்களில் புதுப் புது கதாநாயகிகளை அறிமுகம் செய்து வருகிறார். இதுவரை 7 படங்களை தயாரித்துள்ள அர்ஜுன், இப்போது 'மதராஸி' என்ற படத்தை தயாரித்து கதாநாயகனாக நடிக்கிறார்.

இப்படத்திலும் வேதிகா என்ற மும்பை இளம் நடிகையை கதாநாயகியாக அறிமுகம் செய்கிறார். இன்னொரு புதுமுக நடிகை ஹாரிகாவும் இந்தப் படத்தில் அறிமுகம் ஆகிறார். புதுமுக நடிகைகளையே கதாநாயகிகளாக அறிமுகம் செய்வது பற்றி அர்ஜுனிடம் கேட்டபோது....

கதை அமைப்புக்குப் பொருத்தமான கதாநாயகிகளை நான் தேர்வு செய்கிறேன். மும்பையில், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களை மட்டுமல்ல, தென்மாவட்டங்களைச் சேர்ந்த எல்லோரையும் 'மதராஸி' என்றுதான் அழைக்கிறார்கள். அங்கிருந்து மும்பை சென்று தாராவி பகுதியில் வாழும் ஒரு வாலிபன் சந்திக்கும் பிரச்சினைகளை இந்தப் படத்தில் சொல்கிறேன். இதற்குப் பொருத்தமான நாயகியாக வேதிகா இருப்பார் என்று அவரைத் தேர்வுசெய்திருக்கிறேன் என்றார்.

புது நடிகைகளை எப்படித் தேர்ந்து எடுக்கிறீர்கள்? என்ற கேள்விக்கு. அழகு, திறமை, நடிப்பு இருக்கிறதா? என்பதைக் கண்டுபிடித்து புது நடிகைகளை தேர்வு செய்கிறேன். இந்தப் படநாயகி வேதிகாவின் படம் முதலில் கிடைத்தது. அவர் அழகாக இருந்தார். எனவே அவரை வரவழைத்து நடிக்கச் சொன்னேன். நன்றாக நடித்தார். சொல்லும் விஷயங்களைப் புரிந்து கொள்ளும் திறமையும் அவரிடம் இருந்தது. எனவே இந்தப் படத்துக்கு அவரை நாயகியாக ஆக்கிவிட்டேன்.

அழகும் நடிப்பும் உள்ள புதுமுக நடிகைகளை ரசிகர்களும் விரும்புவார்கள். எனவேதான் புதுமுக நடிகைகளை எனது கதாநாயகியாக தேர்வு செய்கிறேன் என்று பதில் அளித்தார்.

ஒவ்வொரு படத்தையும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் வித்தியாசமாக கொடுக்க விரும்புகிறேன். எனவேதான் ஹீரோயின் உட்பட, அனைத்து அம்சங்களையும் புதிதாக ரசிகர்களுக்குக் கொடுக்கிறேன். எனது இயக்கத்தில் உருவாகும் படம் வித்தியாசமாக சொல்லப்பட வேண்டும் என்பதில் முழு அக்கறை எடுத்துக் கொள்கிறேன். அதற்காகத்தான் புதுப்புது கதாநாயகிகளைத் தெர்வு செய்கிறேன் என விளக்கமளித்தார்.

# தேடும் ... ளை



ப் பிடிக்கும் முயற்சியில்
ர்ளை அமையவேண்டும்
ட உலகில் ஜோதிகா,
ார்கள்.
ன் 'மஜா', அஜீத்துடன்
டித்து வருகிறார். வேறு

பிஸி' ஆகி விட்டார்கள்.
க்க வாய்ப்புக் கிடைத்து
கிடைத்து இருக்கிறது. நல்ல படங்கள் வந்தால் எனக்குப் பிடித்தமான
ன அளவு கவர்ச்சி காட்டி நடிப்பேன். மிகவும் ஆபாசமாக நடிக்கமாட்டேன்.
பாரம்பரியமாகவே வசதியான குடும்பம்.
. எனக்கு என்று இருக்கும் தனித்தன்மையை காத்துக்கொள்வதில் நான்
என்னைத் திருமணம் செய்து கொள்பவர் பணம் படைத்தவரா என்பதை விட
கணவர் எந்தச் சூழ்நிலையிலும் தன்னலம் இல்லாமல் என்னை நேசிப்பவராக

குளிர் எங்களை வாட்டுவதாக வைத்துக்கொள்வோம். அங்கு ஒரே ஒரு
டுபவராக இருக்கவேண்டும்.
கும்போது ஒரு தம்ளர் தண்ணீர் கிடைத்தால், அதை எனக்குக் கொடுக்கும்

காலம் வரும்போது இதைப் பார்த்துக் கொள்ளலாம்... என்றார் அசின்.



'தொட்டி ஜெயா'
சிலம்பரசன், கோபிகா

# பேராசான் மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் நினைவுப் பேருரை

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி பேராசான் மூதறிஞர் கலா நிதி சொக்கலிங்கம் (சொக்கன்) நினைவாக 30.05.2005ஆம் திகதி ''இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச சேவை - ஒப்பீட்டு ஆய்வு, நோர்வே - எத்தியோபபியா - இலங்கை" எனற தலைப்பில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் மற்றும் உப பீடாதி பதி பாலசுப்பிரமணியம் தனபாலன் ஆகியோர் நிகழ்த்திய நினைவுப் பேருரையின் தொகுப்பு.**

## இடைநிலை பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை - ஒப்பீட்டு ஆய்வு

## நோர்வே - எத்தியோப்பியா - இலங்கை

**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**
**(பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)**
**பாலசுப்பிரமணியம் தனபாலன்**
**(உப பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)**

(தொடர்ச்சி.....) 3

### மேல் இடைநிலைக் கல்வி
### (Upper Secondary Education)

நோர்வேயில் எனது நேர்முகங்காணல் களை இந்த மட்டத்திலிருந்து நான் தெரிவு செய்த காரணத்தால், இவ் அறிக்கையில் இடைநிலைக் கல்வி பற்றி அதிகளவு விரிவான தகவல்லை நான் தரவுள்ளேன்.

1994 இலையுதிர் காலத்திலிருந்து 16-19 வயதுப் பிரிவினருக்கு, உயர் கல்விக்கு அல லது தொழிற்கல்வி தகைமைகளுக்கு வழி வகுககின்ற மேல் இடைநிலைக் கல்வியை 3 வருடங்களுக்குப் பெறுகின்ற உரிமை உள்ளது.

. விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கின்ற மூன்று அடிப்படைக் கற்கை நெறிகளில் ஒன்றினைக் கற்பதற்கு உரித்துடையவர் களாவர். தொழிற்கல்விக்கு விண்ணப்பித் தோர் உயர் கல்வியைப் பெறுவதற்குத் தேவையான மேலதிக தகைமைகளைப் பெற் றுக்கொள்வது சுலபமாக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டது போன்று, இளை ஞர்கள் பாடசாலை செல்லாது அல்லது வேலைவாய்ப்பற்று இருக்காது பார்த்துக் கொள்வது மாவட்ட அதிகாரிகளின் சட்ட ரீதியான கடமையாகும். விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர்கள் 3 வரு டங்களுக்கும் கூடுதலான இடைநிலைக் கல்வியைப் பெறுவதற்கு உரித்துடையவர் களாவர்.

மேல் இடைநிலைக் கல்வி நாடு முழு வதிலும் வழங்கப்படுவதுடன், யாவருக்கும் சமமான கற்கை நெறிகளை மேற்கொள் வதற்கென வடிவமைக்கப்பட்டதாகும். முன்பு பல்வேறு வகையான இடைநிலைப பாடசாலைகள் இருந்த போதும், 1976ஆம் ஆண்டிலிருந்து பொதுக்கோட்பாடு மற்றும் தொழிற்பயிற்சியை இணைத்த ஒரே சீரான மேல் இடை நிலை உயர் பாடசாலைகள் நோர்வேயில் இருப்பதுடன், செய்முறை மற றும் கோட்பாட்டு ரீதியான கல்விக்கு கொள்கை ரீதியிலாவது சம அந்தஸ்து வழங கப்படுகின்றது. இக்கல்வி அருகருகே - ஒரே கட்டிடத்தில் வழங்கப்படுகின்றது. முதலாவது வருடத்தின் போது அடிப்படை யான 15 கற்கைநெறிகளில் ஒன்று வழங்கப்படுகின்றது. அடுத்த இரு வரு டங்களில் விசேட கற்கை நெறிகளும், பயிலுனர் பயிற்சியும் வழங்கப்படுகின்றது. முதலாவது இரு வருடங்களிலும் பாட சாலையில் பயிற்சி வழங்கப்படுகின்றது. கடைசி வருடத்தில் ஒரு வேலைத்தளத் தில் வேலையுடன் சேர்நத பயிற்சி வழங் கப்படுகின்றது.

போதியளவு வேலைத்தளம் கிடைக் காதபோது முழுப்பயிற்சியும் பாடசாலையி லேயே வழங்கப்படுகின்றது. எனினும் ஒரே சான்றிதழே மாணவுர்களுக்கு வழங்கப்படு கின்றது.

### நோர்வேயில் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்

வழிகாட்டல் ஆலோசனை வழங்கற் சேவையானது நோர்வே பாடசாலைகளில் ஒப்பீட்டளவில் புதிய ஒரு விடயமாக உள் ளது. புதிய கல்வி ஒழுங்குமுறையின் அறிமுகப்படுததல் காரணமாக இது கிட்டத் தட்ட 1960இல் ஆரம்பிக்கப்பட்டது.

பல்வேறு சிரமங்களுக்கிடையே சரியான கறகை நெறிகளை மேற்கொள்வதற்கு மாண வர்களுக்கு வழிகாட்டுவதற்கான நடத்தை வாததையும் (Behaviourism), விடயம் சார்ந்த சோதனையில் நம்பிக்கையும் (Objective Testing) அடிப்படையாகக் கொண்ட அந்த நாட்களின் சித்தாந்தத்தை இச் சித்தாந்தம் பிரதிபலிப்பதாக உளளது.

1970 இல், பல்வேறு சமூக உணர்ச்சி அல்லது நடத்தைப் பிரச்சினைகளைக் கொண்ட மாணவர்கள் மீது கவனம் செலுத் துவதான சமூக, கல்விப் பணிகளுக்கு இந்த நோககு மாற்றப்பட்டது.

அதாவது ஒரு வகையில் பாடசாலை யின சமூகப் பணிகளுக்கு 1970 ஆம் ஆண் டின ஆரம்பம் வரை தேவையான தகைமை கள் குறித்து அதிக விவாதம் இடம்பெற் றது. அதாவது இப்பணிக்கு ஒரு சாதாரண ஆசிரியரா அல்லது நிபுணத்துவம் வாய்நத ஒருவரா (உதாரணமாக ஓர் உளவியலாளரா) தேவையென விவாதிக்கப்பட்டது. முத லாவது நிலைப்பாடு வெல்லப்பட்டது.

1990 வரை விசேடத்துவமான தகை மைகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. இப்பொழுது இது மாற்றமடைந்து வரு கின்றது. மாவட்டங்கள், மாநகர சபைகள் போன்ற அதிகளவான பாடசாலை அதிகார அமைப்புகள் இவ்வகையான பணிக்கு ஆகக குறைந்தது விசேடத்துவமான கல்வி தேவை எனக் கோருகின்றன. சமூகத்தில் பாடசாலையின் பாதுகாவலர் பாகம் (Care taker Role) 1980 மற்றும் 90களில் நன்கு வலியுறுத்தப்பட்டது.

ஓர் ஒழுங்கமைப்பு என்ற வகையில் தனிப்பட்ட முறையிலன்றி பாடசாலை தொடர்பாக அதிக ஒழுங்கு முறையாக ஆலோசனை வழங்குபவர் பணியாற்றலாம் என்ற போக்கு இப்பொழுது உள்ளது.

அததுடன் சமீப காலங்களில் இச் சேவையை இரு பிரிவுகளாகப் பிரிப்பதி லுள்ள அனுகூலம் தொடர்பாக சில ஆராய்ச் சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதா வது ஒரு பணியின் ஒரு பகுதியாக ஒரு சமூ கப் பணியாளர் மற்றும் இரு தொழிறகல்வி வழிகாட்டல் வழங்குவோர் ஆகியோர் இவ ஒழுங்குமுறையின் நன்மைகள் குறித்து வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கு வோரிடையே அதிக விவாதம் நடைபெறு கின்றது.

நோர்வேயில் கலாசாரம் மற்றும் கற்றல் பற்றிய நாடாளுமன்ற வெள்ளை அறிக்கை யானது (White Paper) தொழிற்கல்வி வழிகாட்டல் குறித்துக் கவனம் செலுத்து வதுடன் கல்வி, தொழிற்கல்விப் பிரச்சினைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்த வழிகாட்டல்களைப் பெறுவதற்கு மாண வர்களுக்குச் சட்டரீதியான உரிமை இருப் பதாகக் கூறுவதுடன் ஆலோசனை வழங் கலானது மேலோட்டமானதாகவும், வழி காட்டல் ஆலோசகரின் தகைமை குறைவாக இருப்பதைப் பல மாணவர்கள் உணர்வ தாகவும் தெரிவிக்கின்றது.

அதாவது இந்த வழிகாட்டல் ஆலோ சகர்கள் ஒப்பீட்டளவில் வழிகாட்டுவதில் குறைவான தகைமையைக் கொண்டிருக் கின்றனர் எனபது பல மாணவர்களின் அனுபவமாகும்.

தொழில் மற்றும் நிர்வாகத் திணைக் களத்தின் அறிக்கையிலும் இதே விடயத் தைக் காணக்கூடியதாக உள்ளது. வழி காட்டல் ஆலோசகர்களின் திறைமையை விசேடமாகத் தொழிற்கல்வி ஆலோசனை வழங்குதலைப் பலப்படுத்துவதற்கான அபி விருத்தித் திட்டங்களை ஊக்குவிப்பதற்கு இவ்விரு அதிகார அமைப்புகளும் ஆத ரவு வழங்குகின்றன.

கல்வித் திணைக்களம் எமது விட யத்தைப் பொறுத்தவரையில் "பாடசாலை நிர்வாகத்திடம்" அதனைக் கையளித்த போதும், ஆலோசனை வழங்குவதில் பயன்படுத்தப்படும் ஆளணியினர் மற்றும் ஏனைய மூலவளங்கள் குறித்துத் தீர்மா னிப்பது மாவட்ட மட்டத்திலாகும்.

இந்தவகையில் இன்று நோர்வேயின் அதிகாரிகளின் நிகழ்ச்சி நிரலில் ஆலோ சனை வழங்கல இடம்பெற்றுள்ளதென் பதைக் கூறக்கூடியதாகவுள்ளது.

(தொடரும்)

---

# சுனாமி நிவாரண நிதி யுத்த நடவடிக்கைக்கு எத்தரப்பினாலும் பயன்படுத்தப்பட மாட்டாது

(கொழும்பு)

சர்வதேச சட்டமூல கோட்பாடுகளுக்கு ஏற்ப உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளவர் களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலேயே சுனாமி நிவாரணசபை உருவாக்கப்படுவதாக நீதி மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுஹத்த ஹம்லத் தெரிவித்துள்ளார்.

இயற்கை அனர்த்தங்களினால் நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்களின் அடிப் படைத் தேவைகள் உட்பட சகல வழிகளி லும் உதவுவதே இந்த நிவாரண சபையின் நோக்கம் என்று சுஹத்த ஹம்லத் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு தற்போது செயல்படுத்திவரும் உள்நாட்டில் இடம்பெயர்ந் தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நிலைப் பாடுகளின் அடிப்படைகளை ஆராயந்ததன் பின்னரே பொதுக்கட்டமைப்பு என்னும சுனாமி நிவாரண சபை தொடர்பான யோசனை உரு வாககப்பட்டுள்ளதாக நீதி மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆறாவது விதியின்படி அமைக்கப்பட்டுள்ள மானியம் மற்றும் அதன் 24ஆம் 25ஆம் விதிகளின் அடிப்படைகளில் சுனாமி நிவாரண சபைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக சுஹத்த ஹம் லத் தெரிவித்தார்.

நாட்டிற்கு கிடைக்கும் இவ்வாறான உதவி களை எந்த வகையிலும் யுத்த நடவடிக்கை களுக்குப் பயன்படுத்த எந்தத் தரப்பிற்கும் இடமளிக்கப்படமாட்டாது என்று தெரிவித்த அவர், இந்த நிதியுதவி குறித்து கண்காணிப் பதற்குத் தேவையான கொள்கைரீதியான ஆலோசனைகளும் நியாயங்களும் இந்த யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும் – பிரதமர்

(கொழும்பு)

சுனாமி நிவாரணசபை தொடர்பான யோசனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரி வித்துளளார்.

இதுகுறித்து கடந்த புதன்கிழமை இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப் பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எது எவ்வாறாயினும் கூட்டமைப்பு அரசாங்கத் திலிருந்து மக்கள் விடுதலை முன்னணி வில கியபோதிலும் அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்திச்செல்வதற்குத் தேவையான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும பிரத மர் மேலும் தெரிவித்துள்ளார்.

பல சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பு அர சாங்கங்கள் கவிழ்ந்துள்ளன. கடந்தகால சரித்திரங்களிலிருந்து இதனைப் புரிந்து கொள்ளமுடியும் என்று தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மக்களின் எதிர்பார்ப்புக்கள நிறை வேற்றப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பட்டப்பகலில் ரூ.8 இலட்சம் கொள்ளை

(வவுனியா)

வவுனியாவில் கடந்த புதன்கிழமை தனியார் வங்கியொன்றில் வைப்பிலிட கொண்டு செல்லப்பட்ட 8 இலட்சம் ரூபா பணம பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்டுள்ள தாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

வவுனியா பஜார் வீதியில் உள்ள வர்த் தக நிலைய முகாமையாளர் தனியார் வங்கி யிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு வேறொரு வங்கியில் வைப்பிலிட சென்ற போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் 8 இலட்சம் ரூபா பணத்தைப் பறித்துச சென றுள்ளனர்.

பணத்தைப் பறிகொடுத்தவர் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸில் முறையிட் டுள்ளார். பொலிஸார் இது தொடர்பாக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரு-8)

# திருநாள் திருப்பலி

(சில்லாலை)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத் திருநாள் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் ஒப்புக்கொடுக் கப்படவுள்ளது.

திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச் சொருபப் பவனியும் இடம்பெறும். (ரு-58)

# பயிலரங்கு

(கல்வியங்காடு)

கொழும்பு மனிதநேய அமைப்புக் களின் கூட்டமைப்பின் அனுசரணையுடன் வட இலங்கை சர்வோதயம் நடாத்தும் சமாதா னத்துக்கும் அபிவிருத்திக்குமான செயற் றிட்டப் பயிலரங்கு-2 நடைபெறவுள்ளது.

புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய சேவை வளாக கேட்போர் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு இப் பயிலரங்கு நடைபெறும்.

மனிதநேய வளர்ச்சியிலிருந்து தொடங்கி விஸ்வோதய எழுச்சிவரை மனிதகுலம் மகிழ்வோடும் சமாதானத்தோடும் வாழவும் அபிவிருத்தியை நோக்கி முன்னேறவும் வழி வகுக்க நாம் ஒன்றுகூடி பயில்வோமாக என்ற குறிக்கோளை மையமாக வைத்து இபபயி லரங்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சமாதானத்திற்கு தடங் கலாக உள்ளவர்கள் ஆண்களா? பெண் களா? என்ற தலைப்பில் விவாத அரங்கும் நடைபெறவுள்ளது. (அ-74)

# பெருந்தோட்டத் துறையில் வாக்காளர் பதிவில் முறைகேடு என சமூக அமைப்புகள் சந்தேகம்

(கொழும்பு)

பெருந்தோட்டப் பகுதிகளில் தமிழ் வாக்காளர்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படுகின்றார்களா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளில் வாக்காளர்களைத் திட்டமிட்டு குறைப்பதன் மூலம் அவர்களின் வாக்குரிமைகளை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகள் மறைமுகமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக சமூக அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் 1994ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போது 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

எனினும் வாக்காளர்கள் குறைவு எனக் காரணம் காட்டி அந்த மாவட்டத்தின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் 7ஆகக் குறைக்கப்பட்டது.

மாகாண சபை உறுப்பினர் தொகையும் 17 இல் இருந்து 16 ஆகக் குறைக்கப்பட் டது. இந்த நிலையில் குறித்த விடயம் தொடர் பில் உரியவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது. (அ-9)

# யாழ்.மாவட்டத்தில் பனைகளை தறிப்பதற்குத் தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பனை மரங்களின் தொகை வீழ்ச்சியடைவதைக் கருத்திற் கொண்டும் பனை வளத்தைப் பேணுவதைக் கருத்திற் கொண்டும் யாழ்.மாவட்ட பனை அபிவிருததி சபையுடன் இணைந்து யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய நிறுவனத்தினால இந்த வருடம் 5 இலட்சம் பனம் விதைகள் யாழ். மாவட்டத்தில் நடப்படவுள்ளன.

அத்துடன், பனைவளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் பின்வரும் மூன்று பிரச்சினைகளைத தவிர வேறுதேவைக்கு பனமரங்களை தேவையற்ற விதத்தில், தறிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதிதாக வீடுகட்டும் போது பனைமரம் வீட்டு அத்திவாரத்திற்கு அருகில் இருந்தாலோ மரம் வீட்டுக் கூரையில் விழும் என்ற நிலை ஏற்பட்டாலோ, அத்துடன் பட்ட பனை மரங்கள் ஆகியவற்றையே தறிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் இவற்றைத் தறிப்பதாக இருந்தாலும் அப்பகுதிப் பிரதேச செயலரும், பொருண்மிய அதிகாரிகளும் வந்து பார்வையிட்ட பின்னரே இவற்றைத் தறிக்க முடியும் என யாழ். மாவட்ட பொருண்மியப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் சமூக அபிவிருத்தி வலைப் பின்னல் அமைப்புடன் இணைநது யாழ். மாவட்ட பொருண்மிய அமைபபினால யாழ்.மாவட்டத்தில் 30 ஆயிரம் மரக் கன்றுகள் நடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

# அறநெறிப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகத்தினால் கடந்த மே மாதம் 15,16, 17ஆம் திகதிகளில் திரு இருதயக் கல்லூரியில் நடத்தப்பட்ட அறநெறிப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இவர்களிற்கான பரிசில்கள் ஜூலை மாதம் நடைபெறும் அறநெறிவிழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

***பாடசாலை மட்டப் போட்டி முடிவுகள்***

**பண்ணிசைப். பிரிவு I**

1 ஆம் இடம் - த.தாரணி - விக்னேஸ் வராக் கல்லூரி.

2 ஆம் இடம் - து.பிரதிகா - மாணிக்கவாசகர் வித்தி.

3 ஆம் இடம் - செ. சிந்துஜா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**பிரிவு II**

1 ஆம் இடம் - ந. சுனித்தா- விக்னேஸ் வராக் கல்லூரி.

2 ஆம் இடம் - நா. தேனுகா -வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

3 ஆம் இடம் - செல்வி சி.சிவபானுகா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**பிரிவு III**

1 ஆம் இடம் - ஜெ. ஹம்சவதி - வடமராட்சி மத்திய மகாவித்தி.

2 ஆம் இடம் - யோ. தர்சிகா - விக்னேஸ்வராக்கல்லூரி.

3 ஆம் இடம் - யோ.சுபா - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**பிரிவு IV**

1 ஆம் இடம் - க.கஸ்தூரி - விக்னேஸ் வராக் கல்லூரி.

2 ஆம் இடம் - ந. ரஞ்சித்பாலன் - நெல்லியடி மத்திய மகாவித்தி.

3 ஆம் இடம் - த. இந்திக்கா - நெல்லியடி மத்திய மகாவித்தி.

***பஜனைப் பிரிவு***

1 ஆம் இடம் - விக்னேஸ்வராக்கல் லூரி.

**பிரிவு II**

1 ஆம் இடம் - வடமராட்சி ம.ம.க

2 ஆம் இடம் - விக்னேஸ்வராக் கல்லூரி.

**பிரிவு III**

1 ஆம் இடம் - விக்னேஸ்வராக் கல்லூரி

**மனனம் பிரிவு I**

1 ஆம் இடம் - ப.விதுசா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் - சி. நர்மிகா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

3 ஆம் இடம் - ஜெ.வசீகரன் - மாணிக்கவாசகர் வித்தி.

**பிரிவு II**

1 ஆம் இடம் - த.துவாரகன் - விக்னேஸ் வராக் கல்லூரி.

2 ஆம் இடம் - ச. சாயிஜெனனி - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

3 ஆம் இடம் - ப. மயூரி - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**பிரிவு III**

1ஆம் இடம் - ம. தர்ஜிகா - வல்வெட்டி இ.த.க

2ஆம் இடம்-ப.இரசானி.-வல்வெட்டி இ. த.க.

3ஆம் இடம் - சோ.வாசினி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**பேச்சுப்பிரிவு I**

1ஆம் இடம் - க.பிரியங்கா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

2 ஆம் இடம் - மு. வேணுகா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

3 ஆம் இடம் - ஜெ. அபிரானு - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

3 ஆம் இடம் - கி. கஜானி- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**பிரிவு II**

1 ஆம் இடம் - சி. சைனுஜா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**பிரிவு III**

1 ஆம் இடம் - பா. ஷண்முகப்பிரியா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் - கி.துளசிதா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

3 ஆம் இடம் - ப. மிதுலா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**பிரிவு IV**

1ஆம் இடம் - பா. பிரியா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

***வில்லுப்பாட்டு***

1 ஆம் இடம் - விக்னேஸ்வராக் கல்லூரி.

***அறநெறிப் பாடசாலை மட்டப் போட்டி முடிவுகள்:***

**பண்ணிசைப் பிரிவு I**

1 ஆம் இடம் - த.தர்சிகா - வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய அ.நெ.பா.

2 ஆம் இடம் - ம.ஜெயரூபா - வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய அ.நெ.பா

3 ஆம் இடம் - ச.துமிலுசா - வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய அ.நெ.பா.

**பிரிவு II**

1 ஆம் இடம் - ச.சுலக்ஷன் - நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய அ.நெ.பா.

2 ஆம் இடம் - க.புனிதா - உச்சில் அம்பாள் அ.நெ.பா.

3 ஆம் இடம் - ப்.ரேணுகா - உச்சில் அம்பாள் ஆலய அ.நெ.பா

**பிரிவு III**

1 ஆம் இடம் - யோ. அஞ்சலா - வதிரி பூவற்கரைப் பிள்ளையார் அ.நெ.பா

1 ஆம் இடம் - க. தர்சிகா - உச்சில் அம்பாள் ஆலய அ.நெ.பா..

2 ஆம் இடம் - ம. சஞ்சீபா - வதிரி பூவற்கரைப் பிள்ளையார் அ.நெ.பா

3 ஆம் இடம் - ர.தீபனா - வதிரி பூவற்கரைப் பிள்ளையார் அ.நெ.பா

3 ஆம் இடம் - சி. பானுமதி - வதிரி பூவற்கரைப் பிள்ளையார் அ.நெ.பா.

**பிரிவு IV**

1 ஆம் இடம் - இ.தயானி - வதிரி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம அ.நெ.பா.

2 ஆம இடம் - அ. றஞ்சிதா-வதிரி அ. நெ.பா

3 ஆம் இடம் - இ.நிரூஷன்- வதிரி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம அ. நெ.பா.

3ஆம் இடம் - க.பகீரதன் - வதிரி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம அ.நெ.பா.

***பஜனை பிரிவு***

1 ஆம் இடம் - வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய அ.நெ.பா

2 ஆம் இடம் - உச்சில் அம்பாள் அ.நெ.பா

**பிரிவு II**

1ஆம் இடம் - தடங்கள புளியடி முருகமூர்த்தி ஆலய அ.நெ.பா

2 ஆம் இடம் - பூவற்கரைப் பிள்ளையார் ஆலய அ.நெ.பா

3 ஆம இடம் - உச்சில் அம்பாள் அ.நெ.பா

**பிரிவு III**

1ஆம் இடம் - ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம இந்து அ.நெ.பா

***மனனப் பிரிவு I***

1 ஆம் இடம் -ச.கஜானன் - தடங்கள் புளியடி முருகமூர்த்தி ஆலய அ.நெ.பா.

1 ஆம் இடம் - கு.நிவேஜா - உச்சில் அம்பாள் ஆலய அ.நெ.பா.

2 ஆம் இடம் - இ.கஸ்தூரி - உச்சில் அம்பாள் ஆலய அ.நெ.பா.

**பிரிவு II**

1ஆம் இடம் - ர.தீபனா - வதிரி பூவற்கரை அ.நெ.பா.

2ஆம் இடம் - க. கௌதமி - ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம அ.நெ.பா.ஷ

3ஆம் இடம்- நா.சுபாங்கினி உச்சில் அம்பாள் அ.நெ.பா.

**பிரிவு III**

1 ஆம் இடம் - செல்வி இ. தயானி

**பேச்சுப் பிரிவு I**

1 ஆம் இடம் - ச.துமிலுசா -வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய அ.நெ.பா

**பிரிவு II**

1 ஆம் இடம் - வீ.திருமகள் - வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய அ.நெ.பா.

2ஆம் இடம்- ச.அருண்ராஜ் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய அ.நெ.பா.

3 ஆம் இடம் - ஜெ. நிருபிகா- வதிரி பூவற்கரைப பிள்ளையார் ஆலய அ.நெ.பா.

**பிரிவு III**

1 ஆம் இடம் - இ.மயூரன் - ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம இந்து அ.நெ.பா.

**பிரிவு IV**

1ஆம் இடம் - அ.றஞ்சிதா - ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம அ.நெ.பா.

***திறந்த போட்டி***

1 ஆம் இடம் - வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம அ.நெ.பா

2 ஆம் இடம் - கரணவாய் பொன்னம்பல வித்தி

3 ஆம் இடம் - உச்சில் அம்பாள் ஆலய அ.நெ.பா

***வில்லுப்பாட்டு***

1 ஆம் இடம் - நெல்லியடி தடங்கள் புளியடி முருகமூர்த்தி ஆலய அ.நெ.பா.

2 ஆம் இடம் - வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம அறநெறிப்பாடசாலை.

***நாடகம்***

1 ஆம் இடம் - வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம அ.நெ.பா (ந-52)

# கைதடியில் இன்று வேரடி மண்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடாத்தும் பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய விளையாட்டு விழாவான வேரடி மண் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணியளவில் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய மைதான முன்றலில மாதர் சங்கத் தலைவி திருமதி இராகினி தலைமையில் இடம்பெறவுள்ள்து.

இதில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க. பிரேமச்சந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திட்ட இணைப்பாளர் செல்வி. ர.சுஜித்தா, கைதடி கலைவாணி வித்தியாசாலை அதிபர் ப.செலலத்துரை ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கைதடி மேற்கு கிராம அலுவலர் சு.செல்வராசா, சரஸ்வதி சனசமுக நிலையத் தலைவர் சு.பார்த்தீபன், கைதடி அரசியல்துறைப் பொறுப்பாளர் பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ந-2)

# மட்டு. மாவட்ட பாடசாலைகளுக்கு நிகொட் நிறுவனம் உதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நன்மை கருதி இந்தப் பாடசாலைக்கு கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு "நிகொட்" நிறுவனம் முன் வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா, மற்றும் பட்டிருப்பு ஆகிய இரண்டு கல்வி வலயங்களில் உள்ள 14 பாடசாலைகளில் முதற்கட்டமாக கழிவறைகள் மற்றும் குடிநீர் கிணறுகள் என்பன அமைக்கப்பட உள்ளதாக "நிகொட்" நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத திட்டத்திற்கென்று ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 1 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(அ-2)

# பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி வடமராட்சியில் மாபெரும் பேரணி

## நாளை நடைபெறும்

(திருநெல்வேலி)

பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தியும் சிங்களப் பேரினவாதிகளின் தமிழர் விரோதப் போக்கைக் கண்டித்தும் யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள படையினரை இங்கிருந்து வெளியேறுமாறு வடமராட்சியில் மாபெரும் பேரணியொன்று நடாத்தப்படவுள்ளது.

தமிழர்கள் அமைதி காத்தது போதும் மீண்டும் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பியுங்கள் எனத் தமிழீழத் தேசியத் தலைவரை வலியுறுத்தும் முகமாகவும் நாளை திங்கட்கிழமை வடமராட்சிப் பகுதி மக்களால் பிரமாண்டமான எழுச்சிப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

வடமராட்சி திக்கம் சந்தியில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இப்பேரணி சுப்பர் மடம் சந்திவரை இடம்பெறவுள்ளது.

இதன்போது கடற்கரை வீதிகளில் உள்ள காவலரண்களில் உள்ள படையினரை வீட்டிற்குச் செல்லுமாறு வலியுறுத்தி சிங்களத்தில் பிரசுரங்கள் விநியோகிக்கப்படவுள்ளதுடன் அவர்கள் தமது உடமைகளைக் கொண்டு செல்வதற்கான பொதிகளும் வழங்கப்படவுள்ளன.

இறுதியாக ஐக்கிய நாடுகள் சபைச் செயலா கொபி அனானிற்கு மகஜர் அனுப்பிவைக்கப்படவுள்ளது. (ந-43)

# மலேசியாவில் தொழில் செய்யக்கூடிய வகையில் இலங்கையருக்கும் பயிற்சி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

மலேசியத் தொழிற்சந்தைக்கு பொருத்தமான வகையில் இலங்கையர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம் விரைவில் ஆரம்பமாகும் என கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரத்ன உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

கடல் கடந்து பணியாற்ற இருக்கும் இலங்கைத் தொழிலாளர்களின் நலன் கருதி தொழிற்கல்வி மன்றத்தை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அடுத்த 6மாத காலப் பகுதியில் 80.000 இலங்கையர்களுக்கு மலேசியாவில் தொழில் வாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்படும். அந்நாட்டில் கட்டட நிர்மாண சுற்றுலா உற்பத்தித்துறைகள் சார்ந்ததாகப் பெருமளவு வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றன. அந்த வாய்ப்புக்கள் கூடுதலாக வெளிநாட்டவர்களுக்கே பெற்றுக் கொடுக்கப்படுகின்றன என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# கூட்டமைப்பு முறிவினால் ஏற்படும் விபரீதங்களுக்கு நாசகார அரசியல்வாதிகளே பொறுப்பேற்க வேண்டும்

## ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முறிவடைந்தமை காரணமாக ஏற்படப்போகும மக்கள் மத்தியிலான விபரீதங்களுக்கு நாசகார அரசியல்வாதிகளே பொறுப்பேற்க வேண்டுமென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின சில்வா நேற்றுமுன்தினம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜெயந்தவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த நாசகார அரசியல்வாதிகளின நாட்டைத் தாரைவார்க்கும் நடவடிக்கைகளுக்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

நாட்டின் நிரந்தர அமைதி, சமாதானம் என பவை தொடர்பில் ஜே.வி.பி மேற்கொணடுள்ள நகர்வுகள் முடிவடைந்து விடவில்லை. அவை அடுத்த அத்தியாயத்துக்கான ஆரம்பமே எனவும் அவர் அனுப்பிவைத்துள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.. (ந-4)

# 'மனவெளி' நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் 'மன வெளி' கலை இலக்கிய அனுபவப் பகிர்வு நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் இதனை வழங்குவார். (ந-2)

# சைக்கிளோட்ட போட்டி

(பொன்னாலை)

தாவடி தெற்கு ஸ்ரீ காளி அம்பாள் சனசமூக நிலையத்தின் 31 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்ட நடாத்தப்படும் யாழ்.மாவட்டத்திலான 50 மைல் சைக்கிளோட்ட போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை 6.00 மணிக்கு நிலைய முன்றலிலிருந்து ஆரம்பமாகவுள்ளது. (ந-49)

# மட்டு. இல் தாக்குதல்

## இருவர் காயம்

மட்டக்களப்பு கல்லடி கடற்கரைக்கு அருகில் புளொட் உறுப்பினர்கள் பயணம் செய்த உழவு இயந்திரம் மீது நேற்றுமுன் தினம் மாலை இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் புளொட் உறுப்பினரொருவரும பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைநதுள்ளனர்.

கடற்கரையிலிருந்து மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியிலுள்ள தமது அலுவலகத்தில் பாதுகாப்பரண் அமைப்பதற்காக மணல் ஏற்றிச்சென்ற புளொட் உறுப்பினர்கள் மதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கைககுண்டு வீசப்பட்டதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது. இதில் புளொட் உறுப்பினரான சதாசிவம் சித்தரவேல் (வயுது35) மற்றும் பாதுகாப்பு கடமைக்காகச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் சியம்பல கொட கமகே சுமனதிலக்க (வயது 36) ஆகியோர் காயமடைந்து மட்டக்களபபு வைததியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-4)

# இப்படியும் நடக்கிறது

அண்மையில் நீர்வேலிப் பகுதிக்கு பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பல சரக்கு வியாபார நிலையத்திற்கு வந்த வெளிநாட்டிலிருந்து திரும்பிய யாழ். பிரஜை ஒருவர் இங்கு வந்து மதிய உணவு சாப்பிடுவதறகு கை கழுவுவதற்குத் தண்ணீர் கிடைக்குமா எனக் கடையில் கேட்டார். கடையில் நீர் இருக்கவில்லை. உடனே அதே கடையில் 'பிளேன் சோடா' ஒன்றினை நூற்றிப் பத்து ரூபா (110) கொடுத்து வாங்கி தனது கைகளை கழுவி பின் தான் கொண்டுவந்த மதிய உணவினை ஆட்டோவில் இருந்து உண்டு மீண்டும் அதே சோடாவால் கை கழுவிவிட்டு மீண்டும் தனது பயணத்தினை மேற்கொண்டதனைக் காணமுடிந்தது.

பார்த்தீர்களா நம்மிடையேயும் சோடாவால கைகழுவுபவர்களும் இருக்கிறார்கள் தானே. எங்கே போகின்றது வெளிநாட்டுப் பணம். (122)

# போக்குவரத்து கண்காணிப்பில்

## யாழ்.பொலிஸார் தீவிரம்

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தினைச சேர்ந்த போக்குவரத்து பொலிஸார் வீதிகளில் இறங்கி தீவிரமாகக் கணகாணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக, மோட்டர்ர் சைக்கிள் மற்றும் வாகனத்தில் வரும் பொலிஸார் கொக்குவில், அரசடி, தட்டாதெரு, பூநாரி மடத்தடி போன்ற இடங்களில் தரித்து நின்று வீதியால செல்லும் சகல வாகனங்களையும் சோதனையீடுவதுடன் பத்திரங்களையும் பரிசோதித்து வருகின்றனர்.

மேலும் யாழ். நகரில் ஒரு வழிப்பாதையும் கடுமையான முறையில் கண்காணிக்கப்படுகின்றது. போக்குவரத்து விதிகளைப் பேணுமாறு பொதுமக்களும் அறிவுறுத்தப்படுகின்றனர். (அ-122)

# உண்ணாவிரதப் போராட்டம்

(திருநெல்வேலி)

தமது சொந்த இடங்களில் தங்களை மீளக் குடியேற அனுமதிக்குமாறு கோரி கொடிகாமம் பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் காலை உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தினர்.

கொடிகாமம் வர்த்தக சங்கத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி பத்மினி சிதம்பரநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும பெருமளவான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் பொழுது அப்பகுதியில் பொலிஸாரும் படையினரும் குவிக்கப்படடிருநததுடன் வர்த்தக நிலையங்கள் யாவும மூடப்பட்டிருந்தன.

உண்ணாவிரதப் போராட்ட முடிவில் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு மகஜரொன்று அனுப்பிவைக்கப்பட்டதுடன அதன பிரதிகள் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. (து-43)

# ஐ.தே.க வினரது விடுமுறைகளும் வெளிநாட்டுப் பயணங்களும் ரத்து

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதான ஏற்பாட்டாளர்களின் விடுமுறைகளும், வெளிநாட்டுப் பயணங்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. விரைவில் நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 4ஆவது மக்கள் பேரணியில் அவர்களை கலந்துகொள்ளச் செய்யும் நோககுடனேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் கட்சியின பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்கா தெரிவிததுள்ளார்.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பிரதான ஏற்பாட்டாளர்களினும் விடுமுறைகள் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டன. அத்தியாவசிய தேவையைத் தவிர ஏனைய காரணங்களுக்காக எவரேனும் வெளிநாடு செல்ல வேண்டியேற்பட்டால் கட்சித் தலைவரின அனுமதி பெறபபடவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-8)

# அரசு கவிழும் நிலை ஏற்படின் உடன் தேர்தல் நடாத்தப்படும்

## அமைச்சர் பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் கவிழும் நிலை ஏற்பட்டால் உடனடியாக பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் ஒன்று நடாத்தப்படுமென சுற்றாடல் இயற்கைவள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். அவா அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போது கூட்டமைப்பு அரசிலிருந்து ஜ.வி.பி வெளியேறியுள்ள நிலையில் நாட்டின நிலைமை கருதி நாட்டைவிட்டு எந்த அமைச்சர்களையோ பாராளுமன்ற உறுப்பினர்களையோ வெளியேற வேண்டாமென கேட்டுள்ளோம்.

இதற்குக் காரணம் அரசாங்கத்துக்கு அச்சுறுத்தல ஏற்படலாம் என்பதினால் அல்ல; எவரும் தேர்தலை விரும்பாததனால் அரசாங்கம் எந்தவித சிக்கலுமின்றி இயங்கும்.

மக்களுக்குத் தேர்தல் தேவைப்பட்டாலே நாங்கள் கவலைப்படவேண்டும. ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேர்தல் ஒன்று தேவையிலலை.

ஜே.வி.பியோ சாக்கு போக்குகளுக்கு மத்தியில் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறிக்கொண்டு தேர்தல் நடைபெறுவதை அனுமதிக்கப்போவதில்லை.

எனவே, தேர்தல் ஒன்று நடைபெறமாட்டாது. ஏனைய கட்சிகளுக்குத் தேர்தல் அவசியம இல்லை என்றால் அரசாங்கத்துக்கும் தேர்தல் ஒன்று தேவையில்லை.

ஆனால், அரசு கவிழும் நிலைக்குத் தளளப்பட்டால் நாங்கள் நாடர்ளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம் என்றார். (ந-8)

# வடமராட்சியில் ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(மருதங்கேணிள)

"எமது நிறுவனம் இதுவரை விவ்சாய முயர்சிகளுககே உதவி வந்தது. ஆனால, சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் நிலைமையை உணர்ந்து அவர்களுக்கும் உதவிகளைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தோம்..

இவ்வாறு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூடடுறவுச சங்க சமாசத்திற்கு இரு குளிரூட்டி வாகனங்களை கையளிககும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஒகஸ்பாம் திடடப் பணிப்பாள் மாட்டின் தெரிவித்தார்.

மாட்டின அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

சுனாமி அனர்த்தங்கள் நடந்ததைக் கேள்விப்பட்டவுடன் வடமராட்சி கிழக்கு பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு அங்கு மக்களுக்கு நடந்த சோக நிகழ்வுகளைக் கண்டு கவலையடைந்தோம்.

எமது நிறுவனம் விவசாய முயற்சிகளுக்குத்தான் உதவிகளை வழங்கி வந்தது. சுனாமிக்குப் பின்தான் கடற்றொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நாம தீர்மானித்தோம்.

சுனாமி அனர்த தங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் பயன்பெற வேண்டும என்ற நோக்கில் 'வேலைக்கு ஊதியம்'' என்ற திட்டதை ஆரம்பிததோம். இதன்மூலம் நாளொன்றுக்கு 400 ரூபா வீதம் பயன்பெற முடியும்.

கடற்றொழிலாளர் பிடிக்கும் மீன்களை நல்ல விலையில் விற்பதற்கு வாகனங்கள் அவசியம் தேவை என்ற நோக்கில் தான் இவ் இரு குளிரூட்டி வாகனங்களையும் கையளித்துள்ளோம். சங்க அங்கத்தவர் கள தாம் பிடிக்கும் மீன்களை சமாசத்திற்கே கொடுக்க வேண்டும. அதனால் மீனகளுக்கு நல்லவிலை கிடைக்கும். இதன்மூலம் கடற்றொழிலாளர் பெரும் பயனை அடைய முடியும்.

சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கபபட்ட மக்களுக்கு 40 படகுத் தொகுதிகளைக் கையளிக்கவுள்ளோம். வீதிகளைப் புனரமைப்பதில் ஈடுபட்டுள்ளோம். மற்றும இடைத்தங்கல் முகாம்களில் மலசல கூட வசதி மற்றும் குடி தண்ணீர் வசதியைக் குழாய் மூலம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் ஒக்ஸ்பாம் உதவித் திட்டப்பணிப்பாளர் தவி, கடற்றொழில் பரிசோதகர் ந.கணேசமூர்த்தி, வடமராட்சி கிழக்கு சுனாமி அனர்த்த செயலணிப் பொறுப்பாளர் யாதவன், வடமராட்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்ளபாளர் யூட் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ந-35)

# மக்கள் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியினால் மக்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கடசியின் அரசாங்கத்தை எதிர்பார்த்துள்ளதாக கட்சியின் பிரதித் தலைவர் கருஜெய சூரிய தெரிவித்துள்ளார்.

வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த அரசாங்க்த்தின் நிலையைப் பொதுமக்கள் தற்போது நன்கு உணர்ந்து கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை அறிவுறுத்துவது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை வெலிகமவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது கரு ஜெயசூரிய இந்தக் கருத்துக்களைத தெரிவித்துள்ளார். (அ-2)

# உத்தேச பொதுக்கட்டமைப்பு மூவின மக்களுக்கும் நன்மை தரும்

(கொழும்பு)

சுனாமி நிவாரண கட்டமைப்பு நாட்டை பிளவுபடுத்தும் முயற்சி அல்ல என்று நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இவ் அமைப்பை நிறுவுவதன் மூலம் வடக்கு கிழகது உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட அனைத்து பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் பயனடைவார்கள் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நன்கொடை சமூகம் சுனாமி நிவாரண புனர்வாழ்வு மீள் கட்டமைப்பு பணிகளுக்கு 2.20 கோடி டொலர்களை வழங்கியுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புக்களினதும் ஒத்துழைப்பு இல்லாமல் அதனை பயன்படுத்த முடியாத நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக நிதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளர்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு மருதானை ரயில் நிலையத்திற்கு முன்னால் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா உத்தேச பொதுக் கட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச சார்பானது அல்ல என்றும்,

மூவின மக்களுக்கும் எதுவித பாரபட்சமும் இன்றி நிவாரணங்களைப் பகிர்ந்தளிப்பதே அதன் நோக்கம் என்றும் தெரிவித்துள்ளார். (அ-9)

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - குறள்

வலம்புரி

## சமகால அரசியல் சூழலை சாதகமாகப் பயன்படுத்தவேண்டும்

இலங்கையின் சமகால அரசியல் சூழ்நிலையானது குழப்பமடைந்து காணப்படுகின்றது. இனவாதத்திற்கு முன்னுரிமை அளித்த காலம் கடந்து தமிழர்களை ஒதுக்கிவிட்டு எதனையும் செய்ய முடியாது என்பதை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் உணரும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது.

அரசு கவிழ்ந்தாலும் பரவாயில்லை. பொதுக் கட்டமைப்பை கைவிட்டால் அது நாட்டிற்கு பெரும் கேடாகிவிடும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியதிலிருந்து, தமிழர்களின் பிரச்சினை சர்வதேசமயப்பட்டுவிட்டமை உறுதியாகின்றது.

அதேநேரம் இலங்கைக்கு உதவும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தியுள்ளன. அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் அரசியல்கட்சி ஒன்று பொதுக்கட்டமைப்பை எதிர்க்க, ஜனாதிபதி மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள், சர்வதேசம் என்ற பரந்த சமூகப் பரப்பு பொதுக்கட்டமைப்பை ஆதரிப்பது, விடுதலைப் புலிகளின் மண் மீட்புப் போராட்டத்திற்கு கிடைத்த அங்கீகாரம் என்றே கூறவேண்டும்.

இலங்கையில் காலத்திற்குக் காலம் சிக்கல்கள், குழப்பங்கள் என்பன ஏற்பட்டுள்ளன. அப்போதெல்லாம் தமிழர்கள் பாதிப்படைந்தார்கள் என்பதே உண்மை.

அதாவது கடந்த காலங்களில் நிலவிய அரசியல் சூழ்நிலையானது தமிழ் மக்களுக்குப் பாதகமாகவே அமைந்திருந்தது.

இதற்கு இலங்கை ஆட்சியாளர்களின் இனவாதப் போக்கோ அல்லது சர்வதேசத்தின் பாராமுகமோ அன்றி தமிழ்த் தலைவர்களின் தீர்க்கதரிசனத்தின் குறைபாடோ காரணமாக இருந்திருக்கலாம்.

இவை பற்றிய கிண்டல்கள், ஆய்வுகள் காலத்தை விரயமாக்கும் என்பதால் அவற்றை ஓர் பட்டறிவாக மட்டும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதேசமயம் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து ஆராய்ந்தால் அது தமிழர்களுக்கு சாதகமா? அன்றி பாதகமா? என்பது அரசியல் சூழ்நிலையை நாம் எவ்வாறு கையாளுகிறோம் என்பதிலேயே தங்கியுள்ளது.

இது விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் மிக நிதானமாகவும் தீர்க்கதரிசனத்துடனும் செயற்படவேண்டிய தேவைப்பாடு உண்டு.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரை, பொதுக்கட்டமைப்பை தமக்கு வாய்ப்பாகக் கொண்டு ஜே.வி.பியினர் யார்? அவர்களின் செயற்பாடு என்ன? என்பதை சர்வதேசத்திற்கு காட்டிவிட்டார்.

ஜே.வி.பியின் இனவாத சிந்தனையை இலங்கை வாழ் மக்களுக்கு மட்டுமல்ல. சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்தியதன் ஊடாக அந்தக் கட்சியின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கியுள்ளார். இது அவரின் அரசியல் ராஜதந்திரத்திற்கு நல்லதோர் உதாரணம். அதேவேளை பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதை அறிய வைப்பதிலும் ஜனாதிபதியின் கணை ஏவப்பட்டுள்ளது.

இங்குதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ராஜதந்திர நுட்பம் வேலைசெய்ய வேண்டியுள்ளது. எந்த முடிவை எடுத்துக்கொண்டால், சர்வதேசத்தின் பார்வை தமிழர்களுக்குச் சாதகமாக அமையும் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முடிவுகளை தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

# இலண்டனிலுள்ள இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது இடைநிறுத்தம்

## பிரி. பாராளுமன்ற அலுவல்களுக்கான செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் பிரித்தானியாவில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறும், கடந்த டிசம்பர் மாதம் இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் தொடர்பாக கவனம் செலுத்துமாறும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன 1.4.2005 ஆம் திகதி இலண்டன் சர்வதேச அபிவிருத்தி தொடர்பாக அரச செயலாளருக்கு அனுப்பிய கடிதத்துக்கு சாதகமான பதில் அனுப்பப்பட்டுள்ளது.

பிரித்தானிய டாக்டர் ஜயவர்த்தனாவுக்கு பாராளுமன்ற அலுவல்களுக்கான செயலாளர் ஹென்றி பேர்ன் அம் கையெழுத்திட்டனுப்பிய கடிதத்தில்,

2004 டிசம்பர் 31 ஆம் திகதி சுனாமி அனர்த்தத்துக்கு நேரடியாக உட்பட்ட பிரதேசங்களுக்கு இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புதல் நிறுத்தப்பட்டுள்ளது. சுனாமித் தாக்கத்துக்கு உள்ளான பிரதேசங்களின் நிலைமைகளைச் சீர்தூக்கி ஆராய்வதோடு அது தொடர்பாக மிகத் துல்லியமாக ஆராய்ந்து செயற்பட்டு வருகிறோம்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக யு.என்.எச்.சி.ஆரின் அகதிகள் தொடர்பாக வெளிநாட்டு பொதுச சுகாதார அலுவலகத்திலிருந்து தகவல்களைப் பெற்று வருகிறோம்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு, தென்மேற்குப் பகுதிகளுக்கு அகதிகள் திருப்பியனுப்பப்படுதல் தற்காலிகமாக நிறுதத்தப்பட்டுள்ளது. உண்மையாகவே சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை அகதிகள் தொடர்பாக விசேடமாகத் தங்களது கோரிக்கைக்கு கவனத்தைத் திருப்பி அவர்களைத் திருப்பி அனுப்பாமல் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

## முத்தலிப் படுகொலை விசாரணை அறிக்கையை ஜூலை 14 இல் சமர்ப்பிக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரி முத்தலிப்பின் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிமன்றம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

முத்தலிப்பின் படுகொலை தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவிலேயே இது தொடர்பான அறிவிப்பை மேலதிக நீதிவான் ஹிகான் கிஸ்பிட்டிய விடுத்துள்ளார்.

தலை மற்றும் மார்புப்பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் ஏற்பட்டிருந்ததன் காரணமாகவே முத்தலிப் உயிரிழந்தார் என முத்தலிப் பயணம் செய்த கார் சாரதி சாட்சியம் அளித்துள்ளார்.

இதனையடுத்து முத்தலிப்பின் படுகொலை தொடர்பான விசாரணை அறிக்கையை அடுத்த மாதம் 14ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார். (ற-8)

## விண்வெளி வீரர்களுடன் 2030இல் செவ்வாய்க்கு விண்கலம்

(புதுடில்லி)

எதிர்வரும் 2030ஆம் ஆண்டில் விண்வெளி வீரர்கள் அடங்கிய விண்கலத்தை செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்ப நாசா விண்வெளி ஆய்வு மையம் திட்டமிட்டுள்ளது.

இது குறித்து நாசா விஞ்ஞானிகள் தெரிவித்ததாவது,

நாசா விண்வெளி ஆய்வு மையம், ரோவர் விண்கலத்தை 2005,2009,2011ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது.

விண்வெளி வீரர்கள் அடங்கிய விண்கலம் எதிர்வரும் 2015ஆம் ஆண்டில் சந்திரனுக்கு அனுப்பப்படும். இது தவிர எதிர்வரும் 2030ஆம் ஆண்டில் விண்வெளி வீரர்கள் அடங்கிய விண்கலம் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

சந்திரன் மற்றும் செவ்வாய்க் கிரகங்களில் மேற்கொள்ளப்படும் இதுபோன்ற நடவடிக்கைகள்ால் விண்வெளிக் கப்பல் மற்றும் விண்வெளி வீரர்களுக்குத் தேவையான உயிர் காக்கும் கருவிகளை மேம்படுத்த முடியும்.செவ்வாய்க் கிர த்திற்கு அனுப்பப்படும் விண்கலத்தின் மூலம் கிரகத்தில் உள்ள சுற்றுச் சூழல் நடவடிக்கைகளைக் கண்டறிய முடியும்.

கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறிய துயரத்தில் இருந்து கற்ற பாடம் மூலம் விண்கலத்துறையில் அடிமட்ட ஊழியர்களில இருந்து மேலதிகாரிகள் வரையில் செய்தித் தொடர்பை அதிகரிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

இறந்த விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவின் பெயர் கொலம்பியாவில் உள்ள மலைக்கு சூட்டப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (ற)

# மக்களை மறந்து அதிகாரத்தைத் தக்கவைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடுவதாக எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களை அநாதரவாக்கிய கூட்டமைப்புத் தொடர்ந்தும் தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து பலத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் முயற்சியில் தற்போது ஜனாதிபதி ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதனிடையே பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் சில அரசயல் கட்சிகளுடன் இணைந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மக்கள் விடுதலை முன்னணி மேற்கொணடு வருவதாக ரணில் விக்கிரம சிங்க மேலும் குறிப்பிட்டார்.

இந்த அணைவரும் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சி செய்வதாகவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முனனேற்றுவதற்காகச் செயற்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே எவ்வாறாயினும் மக்கள் விடுதலை முன்னணியை மீண்டும் இணைத்துக்கொண்டு அரசாங்கத்தை நிறுவ பிரதமர் முற்சிபபதாகவும் ரணில் விக்கிரமசிங்க மேலும தெரிவித்தார்.

நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள மக்கள் குறித்துப் பேசுவதற்கு ஜனாதிபதியோ, பிரதமரோ, மக்கள் விடுதலை முன்னணியோ முயற்சிக்கவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டியுள்ளார். தெஹியத்த கண்டிய நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு கூறியுள்ளார். (அ-2)

## திருமலை புத்தர் சிலை விவகாரம் நீதிமன்ற உத்தரவை நிறுத்த உயர் நீதிமன்றம் பணிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள வணக்கஸ்தலங்களை அகற்றுமாறு திருகோணமலை-மஜிஸ்திரேட் நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவை நிறுத்திவைக்குமாறு மேல் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 25ஆம் திகதி திருகோணமலை மஜிஸ்திரேட் நீதவான் விடுத்த உத்தரவையையே நிறுத்தி வைக்குமாறு மேல் முறையீட்டு நீதிமன்றம் தந்தி மூலம் அறிவித்துள்ளது.

திருகோணமலை மஜிஸ்திரேட் நீதவானின் உத்தரவை இம் மாதம் 30ஆம் திகதி வரை இடைநிறுத்தி வைக்குமாறும் பிரதிவாதிகளை இம்மாதம் 29ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் மேல் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக திருகோணமலை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், மாவட்ட செயலாளர்,நக்ரசபையின் செயலாளர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ச-8)

## ஜப்பான் அரசு அன்பளிப்பு

(கொழும்பு)

ஜப்பானிய அரசாங்கம் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 8 மாவட்டங்களில் முகாம்களில் தங்கியுள்ளவர்களின் பாவனைக்கென 100 ஜனரேட்டர்களை வழங்கியுள்ளது.

ஜபபானியத் தூதுவர் அக்கியோசூடா இவற்றை மின் சக்தி எரிபொருள் பிரதி அமைச்சர் குமாரவேல் கமவிடம் கையளித்துள்ளார்.

நிரந்தர வீடுகள் கட்டிக்கொடுக்கும் வரை தற்காலிக வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு மின் வசதியை ஏற்படுத்திக்கொடுக்க ஜனரேட்டர்களை கொடுத்து உதவுமாறு இலங்கை மின்சாரசபை விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த ஜனரேட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

அன்பளிப்பு செய்யப்பட்ட இந்த ஜனரேட்டர்களின் பெறுமதி சுமார் 36 மில்லியன் ரூபாவாகும்.

யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை,அம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய பகுதிகளில் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு இந்த ஜனரேட்டர்கள் விநியோகிககப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-9)



## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

நீ இறைவனிடம் கொள்ளும் அன்பிற்குத் தடையாக எதுவும் குறுக்கிடாதபடி பார்த்துக் கொள . அவனிடம் அன்பு கொள். அன்பு கொள. அன்பு கொள. உலகம் கூறுவதைப் பொருட்படுத்தாமல் இறைவனிடம் பக்தி செலுத்து. உலகம் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்.

சுவாமி விவேகானந்தர்

# ஜனாதிபதியின் அதிகாரத்துடன் சிறுபான்மை அரசு செயற்படும்

## ஹரீம் பீரிஸ் தகவல்

ஜே.வி.பி. அரசாங்கத்தை விட்டு விலகியதால் பாராளுமன்றத்தில் அரசாங்கம் பெரும்பான்மையை இழந்துள்ளபோதிலும் இந்நேரத்தில் பொதுத்தேர்தல் ஒன்றிற்கு செல்லத் தேவையில்லை என்பதே ஜனாதிபதியின் கருத்தென, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நிரந்தர சமாதானத்திற்காகப் பாடுபடுமாறு மக்கள் இருதடவைகள் ஜனாதிபதித் தேர்தல்களின் ஊடாக ஜனாதிபதிக்கு ஆணை வழங்கியுள்ளனர். மக்கள் வழங்கிய இந்த ஆணைக்கமைய செயற்பட ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்கவையும், ஜே.வி.பியின் நந்தன குணதிலகவையும் மக்கள் தோற்கடித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை வெற்றிபெறச் செய்தனர்.

ஜனாதிபதி அதிகாரம் இருக்கையில் பாராளுமன்றத்தில் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை கொண்டு நடத்த முடியும் என்பதே ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் கருத்தாகும்.

அரசாங்கத்தை கவிழ்த்து ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் தேர்தல் ஒன்றிற்கு செல்லமுயன்றால் மாத்திரமே அரசாங்கம் வீழும் எனவும் ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ச-4)

# முஸ்லிம்களுடன் இளம்பரிதி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதிக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலாள சந்திப்பொன்று இன்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பின்போது முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து இளம்பரிதி கேட்டறியவுள்ளார்.

(ச)

### திருமலையில்...

நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிடுகுகளை ஏற்றிச்சென்ற பாரவூர்தி ஒன்று சேருவில பகுதியில் வைத்து எரியூட்டப்பட்டது. இதன் பின்னர் பொதுமக்கள் சிலர் குழுவொன்றினால் மோசமாகத் தாக்கப்பட்டனர். இதனையடுத்து நிலைமையினை பார்வையிடச் சென்ற யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வாகனத்தின்மீதும் சரமாரியான கல்வீச்சும் இடம்பெற்றது. இதனால் வாகனம் முழுமையாக சேதமடைந்தது.

இவ் வாகனத்தில் பயணம் செய்த மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதித்த தலைவர் ஒபே ஜான்சன், கடற் கண்காணிப்புக்குழு பிரதிநிதி ஜோன்சன் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் இராணுவப் பாதுகாப்புடன் திருமலையை வந்தடைந்தனர்.

சேதமடைந்த கண்காணிப்புக் குழு வாகனம் சேருவில பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ளது.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்காக எடுத்துச் செல்லப்பட்ட படகுகளும் லொறி ஒன்றும் எரிக்கப்பட்டன. இச் சம்பவத்தினையடுத்து அப்பிரதேசத்தில் பெருமளவு இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். (ச-4)

### சி.சு.கட்சி...

சிறுபான்மை பலம்கொண்ட அரசாங்கத்தின் சிறிது காலத்திற்கு முன்னெடுத்தல், ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி அமைக்குமாறு அழைப்பு விடுத்தல், ஜே.வி.பியினால் ஏற்படுத்தக்கூடிய கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தல் மற்றும் தற்போதைய அரசாங்கத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் ஒருவருட காலத்திற்கு முன்னெடுத்துச் செல்லல் ஆகிய யோசனைகளே முன்வைக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் இவ் விடயங்கள் குறித்தும் ஏனைய விடயங்கள் குறித்தும் ஆராயவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பிலிருந்து வெளியேறக்கூடாது என்று ஜனாதிபதி கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

### திருமலை புத்தர்...

நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசி இறுதித் தீர்வுக்கு வரவுள்ளதாக தெரிவித்த தமிழர் பேரவையினர் யூலை 10 ஆம் திகதிக்கு பின்பு எவருடனும் பேசுவதற்கு தயாரில்லை என்றும் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவித்தும் அதனை எதிர்ப்பவர்களைக் கண்டித்தும் எதிர்வரும் 20 திகதி முதல் 22 ஆம் திகதிவரை திருகோணமலையில் அடையாள உண்ணாவிரதத்தையும் தாம் மேற்கொள்ளவுள்ளதாக திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

இதேவேளை தற்காலிக கட்டடங்களை அகற்றுவதற்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீதிமன்றம் தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

### இராணுவக்...

கூடுதலாக சிறுவர்களும் பெண்களுமே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாடசாலைகள் அழிக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் பெருமளவில் கொல்லப்பட்டுள்ளனர். சிறுவர்களின் எதிர்காலமே சூனியமாக்கப்பட்ட நிலையில்தான், தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் சிறுவர்களின் நலன்களில் தீவிர கவனம் எடுத்து வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். எமது தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் பெற்றோர்களை இழந்த பல்லாயிரக்கணக்கான சிறுவர்களைப் பராமரித்து வருகிறோம்.

சிறுவர்களின் நலன்கள் தொடர்பில் பல மனிதாபிமான பணிகளை முன்னெடுத்து வருகிறோம். சிறுவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. வளப்பற்றாக்குறை, மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் உள்ள சிக்கல்கள், குடும்ப வறுமை, வேலைப் வாய்ப்பு இன்மை ஏனைய வசதியின்மைகள் பற்றி இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம் என்றார். -(ச-4)

### முஸ்லிம்கள்...

நாங்கள் தயாராகவுள்ளோம். அத்துடன் சுனாமி ஆழிப்பேரலையால் தாக்கத்திற்கு உட்பட்ட முஸ்லிம் மக்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு சில யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொண்டால் பொதுக் கட்டமைப்பிற்கு ஆதரவு வழங்க தாங்கள் தயாராகவிருப்பதாக ஹக்கீம் கூறினார்.

எம்மையும் எமது யோசனையையும் மீறி பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட அரசு முயற்சிக்குமானால் போராட்டங்களிலும், உண்ணாவிரதப் போராட்டங்களிலும் குதிக்கவுள்ளதாக ரவூப் ஹக்கீம் எச்சரித்துள்ளார். (ச-4)

### பொதுக் கட்டமைப்பை விரைவு....

மக்கள் விடுதலை முன்னணி தனது ஆதரவை விலக்கிக்கொண்டதால் அது அங்கம்வகித்த ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கம் சிறுபான்மை அர்சாங்கமாகியுள்ளது.

இதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய அரசியல்மாற்றங்களின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்கால அரசியல செயல்பாடுகளை விவரிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது..

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனைகளை சமர்ப்பித்த விடுதலைப் புலிகள், அதுபற்றி பேசுவதற்கான திகதிகளை நிர்ணயிக்கும்படி கோரினர். அவ்வாறான பேச்சுவார்த்தைக்கு திகதிகளை நிர்ணயிக்க ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தயாராக இருந்தது. பாராளுமன்றக் கலைப்பு, புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டமை ஆகியவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் ஸ்திரமின்மை இம் முயற்சிகளைச் சிதறடித்தன.

சமாதான செயற்பாட்டை சீர்குலைக்கவேண்டும் என்ற அக்கறையுடன் ஆயுதப்படையினரும், தமிழ்த் துணைப்படையினரும் கூட்டாகச் செயற்பட்டுவருவது யுத்தநிறுத்தத்திற்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. சமாதான நடைமுறையை முன்னெடுத்துச் செல்வதற்கு இது பாரதூரமான முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் விதிகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படவேண்டுமென்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் கடல்கோளின் பின்னராக கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை ஆரம்பமானது.

பொதுக் கட்டமைப்பு என்ற யதார்த்தத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் விரைவாக ஆரம்பமாகுமென்று இலங்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்தது. எவ்வாறாயினும் இதுதொடர்பான உடன்பாடு கைச்சாத்திடுவது நீண்ட காலதாமதத்திற்கு உள்ளாகியுள்ளது.

இந்த உடன்பாட்டைச் செய்வதற்கான முக்கிய எதிர்ப்பு அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பியிடம் இருந்து வந்தது. ஜூன் 15 இற்கு முன் பொதுக்கட்டமைப்பு யோசனையை விலக்கிக்கொள்ள வேண்டுமென்றும், இல்லாவிடில் தனது ஆதரவை விலக்கிக்கொள்ளப் போவதாகவும் ஜே.வி.பி. காலக்கெடு விதித்தது. அதன்படி ஜே.வி.பியும் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது.

நோர்வே அனுசரணையுடன் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன், இனியும் காலத்தை இழுத்தடிக்காமல் கடல்கோள் தொடர்பான கட்டமைப்பில் கைச்சாத்திடவேண்டுமென்று அரசாங்கத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது.

அதன் பின்னர் அந்த உடன்படிக்கை பயனளிக்கக்கூடிய விதத்தில் நடைமுறைப்படுத்துவதையும் அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைபயை விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த யோசனைகளின் பிரகாரம் நிறுவது தொடர்பான பேச்சுவார்த்தையும் தாமதமின்றி ஆரம்பிக்கவேண்டும். மற்றும் சமாதான முயற்சியை தொடரவேண்டும்.

இவ்வாறான சரியான வழியில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பூரண ஆதரவை வழங்குமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


யாழில் முதன்முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்

கடல், விமான மார்க்கமாக வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு உணவு, உடை, அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றுடன் கடிதங்கள், விடியோ நாடாக்கள் முதலியவற்றை குறைந்த செலவில் அனுப்பிட

கடல் மார்க்கமாக (SEA CARGO)
ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், ஹொலண்ட், இத்தாலி)
கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, லண்டன்
5 KG 2500/=

விமான மார்க்கமாக (AIR CARGO)
கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, லண்டன் → 1 KG 1000/=
ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, ஹொலண்ட்) → 1 KG 650/=

Note: நாமே பொதிசெய்து அனுப்புவோம்

RAINBOW TRAVELS & TOURS
32/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(அபிநயா நகைமாடத்திற்கு மேல்) T.P: 0777328219



மனோகரா யாழ்
அதிரடி வெளியீடு
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லிஆகியோரின் சிறப்பு நடிப்பில்

அந்நியன்
இயக்கம்: ஷங்கர்
இசை: ஹரிஸ் ஜெயராஜ்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30



நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த், மீனா, நம்பியார் மற்றும் பலர் நடித்த
சேதுபதி I.P.S
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)



எம்மிடம் சகல விதமான ரீவிக்களும், CD,VCD,DVD PLAYER களும், சகலவிதமான றேடியோக்களும், மற்றும் மின்சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்

நீரு சிற்றி ரேடர்ஸ்
மேல்மாடி. இல135/1 கஸ்தூரியார் வீதி
குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்
(C- சு) T.P: 021 222 3226



நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இன்டி பெண்டன்ஸ்டே டைரக்டர் ரோலண்ட் எம்ரீக் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்
THE DAY AFTER TOMORROW
(தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை விபரிக்கும் சித்திரம்
கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (பு.நே)
பாடசாலை ஊடாக வரும் மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்



EXPOAIR your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள் ளூர் விமான சேவை...


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.